
மக்கள் விடுதலை முன்னயினின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

# செஞ்சக்தி

2014 ஜூன் அணி 09 படை11
விலை ரூபா 20.00

UNIVERSITY OF JAFFNA LIBRARY 25 JUN 2014 PERIODICALS DIVISION

LIBRARIAN'S OFFICE RECEIVED 17 JUN 2014 LIBRARY UNIVERSITY OF JAFFNA



## மகிந்தவின் வாக்குறுதி தன்னையே தாக்குகின்றது

# மோடியும் '13 பிளஸ்' கேட்கிறார்

**இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்கு மறு நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பரந்தளவிலான அதிகாரப் பகிர்வதாக 2010ல் மகிந்த ராஜபக்ஷவினால் அளிக்கப்பட்ட இராஜதந்திர உறுதிமொழிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென இந்தியாவின் புதிய பிரதமர் ராஜபக்ஷாவிடம் வலியுறுத்தியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அரசியல் ஆய்வாளர்கள் கூறுவதாவது. தமிழ்நாட்டு அரசியல் அழுத்தங்களிலிருந்து மீண்ட மோடியின் வருகையானது இந்திய வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றத்தை எதிர்பார்த்திருந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கனவு மோடியின் கடுமையான தொனியில் கலைந்துப் போயுள்ளது.**

யுத்தம் முடிந்த பின்னர் இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் அவர்களுக்கு அளித்த 13 வது சீர்திருத்த, அதிகாரப்பகிர்வு எனும் இராஜதந்திர வாக்குறுதி, 2010 ஜூன் 08-11 மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு சென்றிருந்தபோது 13வது அரசிறயல் சாசனத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று இந்திய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு அளித்த வாக்குறுதி. அதேபோன்று அண்மைக் காலமாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமான இராஜதந்திர நடவடிக்கைகளின்போது 13க்கு அப்பால் சென்று தீர்வினை வழங்குவதற்கு தமது அரசாங்கம் தயாராகி வருவதாக உறுதியளித்திருந்தார்.

இதற்கமைய நடந்து முடிந்த இந்திய தேர்தலில் பாராதீய ஜனதா கட்சி அமோக வெற்றிபெற்றதன் பின்னர் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்த முதலாவது அரச தலைவர்" மகிந்த ராஜபக்ஷவாகும். அவர் மோடியை இலங்கைக்கு வரும்படி அழைப்பு விடுத்தாகவும் அறியக்கிடைத்தது. அதேவேளையில் பதவியேற்பு விழாவுக்கு ராஜபக்ஷாவை அழைக்க கூடாதென தென்னிந்திய அரசியல் கட்சிகள் கூறியபோதிலும் அதை பொருட்படுத்தாது மகிந்தவுக்கு விடுத்த அழைப்பானது, நரேந்திர - மஹேந்திர நட்புதான் என புலங்காகிதமடைந்து சில ஊடங்கங்களில் கருத்துத் தெரிவித்தன. தமிழ்நாட்டு முதல மைச்சர் ஜெயலலிதா பதவியேற்பு வைபவத்தை புறக்கணித்தமை, அன்றைய தினம் ஆர்பாட்டம் செய்த வை.கோவின் கைது, மகிந்த மோடியின் நடபுறவுதான் என்று பூரித்துப்போயிருந்தபோது,

இந்த நிலமைகளோடு ராஜபக்ஷவின் இந்திய பயணத்தை அரசாங்கம் பெரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தது. பிரதமர் மோடியின் "புதிய" வெளிநாட்டு கொள்கையின்படி செயற்படுவதற்கு தயாராகி வந்தனர். எவ்வாறாயினும் இந்திய ஊடகங்களில் வெளியான கருத்தானது பிரதமர் மோடி பதவியேற்றதன் பின்னர் அதாவது கடந்த 27ம் திகதி நடைபெற்ற உத்தியோகப்பூர்வ சந்திப்பின்போது பிரதமர் மோடி எல்லாவற்றிக்கும் முன்னர் நீங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என வலியுறத்திள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியான தேசம், நேர்மையான சமுதாயம், அடிமையில்லாமனிதன்!

# ஆசிரியர்களின், அதிபர்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்த்துவிடு!




ஆசிரியர்களின், அதிபர்களின் துண்டிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்தை வற்புறுத்தும் பாரிய கூட்டு கண்டனப் பேரணியொன்றை கடந்த 28ம் திகதி பத்தரமுள்ள பாராளுமன்ற சுற்று வட்டத்திலிருந்து இசுறுபாய வரை நடாத்தப்பட்டது. சுமார் 3000 ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்த பேரணியை ஆசிரியர், அதிபர் தொழில்சங்க கூட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியர்களும், அதிபர்களும் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கு அறியத்தந்தாலும் எவ்வித தீர்வுகளும் பெற்று கொடுக்காததால் அதற்கு எதிராக தொழில் சங்க நடவடிக்கைகளை எடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். கீழ்வரும் பிரச்சினைகள் குறித்தே இவர்கள் அரசாங்கததுக்கு எதிரான கண்டன பேரணியை நடாத்தினார்கள்.

01) இந்நாட்டு அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 4 ஆண்டுகளாக பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை.

02) அரசாங்கத்தினால் இதுவரை காலமும் வழங்கப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடைக்கு பதிலாக சாகும் வரை வங்கியின் கடனாளிகலாக்கப்பட்டு ஓய்வூதியத்தையும் ஆபத்தில் வீழ்த்தியுள்ளது.

03) ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்காமல் இப்போ 17வருடங்கள் கடந்திருக்கின்றது.

04) எமது இதர சம்பள யோசனைகளை குப்பை கூடத்தில் போடப்பட்டுள்ளது.

05) உரிமைகளை துண்டிக்கப்பட்ட ஆசிரியர், அதிபர் சேவைக்காக அளுத்தமிக்க புதிய யாப்பொன்றை கொண்டுவருவதற்கு தயாராகவுள்ளது.

06) ஆசிரியர்கள் இடமாற்ற தேசிய திட்டத்தை ரத்து செய்யப்பட்டுள்ளது.

07) ஆசிரியர்கள், அதிபர்கள் இடமாற்ற பீதியில் இருக்கின்றார்கள்.


08) மோசடிமிக்க, அளுத்தமிக்க பாடசாலை மதிப்பீடு, செயல்பாட்டு குழுவினால் ஆசிரியர்களை எழுதுவிலைஞர்களாக மாற்றியுள்ளது.

10) பிரதி ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் தொழிலை இல்லாமல் செய்துள்ளது.

11) ஆசிரியர் தொழிலுக்கு முன்னுரிமை வழங்கி இணைத்து கொண்ட, பட்டதாரிகள் அதற்கு முன் பணிபுரிந்த காலப்பகுதியை துண்டிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வூதிய பணிக்கொடை துண்டிப்புக்கு எதிராக தொடர்ந்தும் போராடுவோம்!

**அகில இலங்கை தொழில் சங்க சம்மேளனத்தின் செயலாளர் தோழர் சமந்த கோரளே ஆராச்சி**



இதுவரை காலமும் அரச ஊழியர்களின் வரப்பிரசாதமான ஓய்வூதிய பனிக்கொடையை துண்டிக்கப்பட்டு அதற்கு பதிலாக வங்கியின் மூலம் கடனை பெற்றுகொடுப்பதற்கு அரசு எடுத்திருக்கும் முடிவுக்கு எதிராக அரச ஊழியர்கள் பெரும் எதிர்ப்பை காட்டிவருகின்றனர். இதற்கு கண்டனம் தெரிவித்து பல ஆர்பாட்டங்கள் நடக்கும் அதேவேளை அண்மையில் அரச அச்சக கூட்டுதாபனத்தின் அருகில் நடாத்தப்பட்ட ஆர்பாட்டத்தில் அங்கு பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர். ஓய்வூதியர்களுக்கு சேர வேண்டிய பணத்தை கொண்டு அரசு, தெயட்ட கிருள, ச்சோகம் போன்ற கழியாட்டங்களை நடாத்தி பணத்தை வீணாக்கி வருகின்றது. அதேபோன்று அரச துரையில் பல சிக்கல்கள் தோண்றியுள்ளது. அரசியல் அளுத்தங்கள், நியாயமற்ற பதவி உயர்வுகள், முறையற்ற ஆட்சேர்ப்புகள் போன்ற காரணங்களினால் அரச துறை படிப்படியாக செயலிழக்கச் செய்து அரச ஊழியர்களை அத்துறையிலிருந்து வெளியேற்றுவதற்கான சூழ்ச்சி திட்டமொன்று இயங்குவதாக, ஓய்வூதிய கடன் கொடுப்பனவு எதிரான தொழில் சங்க கூட்டு சார்பாக தேசிய தொழில் சங்க சம்மேளனத்தின் செயலாளர் தோழர் சமந்த கோரளே ஆராய்ச்சி தெரிவிக்கிறார். அதேபோன்று இப்போராட்டத்தை இடையில் நிறுத்திவிடாமல் தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டு போவதாக வலியுறுத்துகின்றார்.

# சிறுபிள்ளைகளின் பெம்பசுக்கும் வரி அறவிடும் ஓர் அரசு!

**பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சுனில்ஹந்துன்நெத்தி**



மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சுனில் ஹந்துன் நெத்தி அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கிறோம்.

இறக்குமதி செஸ் வரியை அமுலாக்குவதற்காகத் தான் இந்த அரசு ஓர் கெசட் அறிக்கையை கொண்டு வந்துள்ளது. எமக்கு தெரியும் இந்த இறக்குமதி செஸ் வரியின் நோக்கம் இறக்குமதி பொருட்களுடன் போட்டியிடும் எமது நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காகத் தான் இருக்க வேண்டும். ஆனால் பிரச்சினை என்னவென்றால் உண்மையில் அரசு இந்த வரியை அறவிடுவது உள்நாட்டு உற்பத்தியாளரை பாதுகாக்கவா அல்லது திரைசேரியை பாதுகாக்கவா என்ற சந்தேகம் எழும்புகின்றது. ஏனென்றால் சாதாரண மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் மீது வரி அறவிடும் புதிய திட்டமாகவே அன்றி உள்நாட்டு உற்பத்தியாளரை பாதுகாக்கும் நோக்கில் அல்ல இந்த செஸ்வரி அறவிடப்படுகின்றது. நான் அதற்கான உரிய உதாரணத்தை இங்கு சுட்டிக்காட்டுகிறேன். இன்று இந்த வரி அறவிடும் பொருட்களின் பட்டியலை எடுத்து கொண்டால் 2014 ஜனவரி 20ம் திகதி அதிவிசேட கெசட் அறிக்கையில் ஒரிடத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது,

“எந்த மூலப்பொருளில் உற்பத்தி செய்யும் சுகாதார துவாய்கள் (Sanitary Towls), டெம்போன்கள், கைதுடைப்பு, சிறுபிள்ளைகளுக்கான கழிவு பொருட்கள் (Napkins) மற்றும் அவை சார்ந்த பொருட்கள்”

ஒரு பிள்ளை பிறந்ததும் பயன்படுத்தும் நெப்கினிக்கு செஸ் வரியை அறவிட்டுள்ளார்கள். இந்த கெசெட் அறிக்கையில் இருக்கும் விதத்தில் ஒரேயொரு கேள்வியை தான் இங்கு கேட்கிறேன், முன்னால் சுகாதார அமைச்சரும் இத்தருணத்தில் இங்கு இருக்கிறார். இப்போ இலங்கை அரசுக்கு பாரிய அச்சுருத்தலாக உள்ள, தேசிய உற்பத்தியாளருக்கு அச்சுருத்தலாக உள்ள நெப்கின்கள் எமது நாட்டில் எங்கு உற்பத்தி செய்கிறார்கள்? நோய்வாய்பட்டால், வயது முதிர்ந்தால் அவர்களுக்கு தமது பிள்ளைகள் கட்டாயமாக பெம்பசுகளை அணிவிக்க வேண்டும். இவற்றின் விலைதான் இறுதியாக அதிகரிக்கின்றது. இறுதியில் இந்த பணத்தை யாரிடமிருந்து அறிவிடுகிறார்கள்? அது அப்பாவி நோயாளிகளிடமிருந்தும், அவர்களை பராமறிக்கும் பிள்ளைகளிடமிருந்தாகும் அல்லது சிறுபிள்ளைகளை பராமறிக்கும் அப்பாவி பெற்றோர்களிடமிருந்து ஆகும். அப்பாவி பிள்ளைகளுக்கு அணிவிக்கும் பெம்பசுக்கும் வரி அறிவிடும் ஓர் அரசாங்கம் இது. இத்தருணத்தில் சுகாதார பிரதி அமைச்சர் இந்த சபையில் இருக்கின்றார், இது நியாயமா என்று நீங்கள் சிந்தித்து பாருங்கள். பெம்பசுக்கும் வரி அறவிட்டு பணத்தை சேர்க்கும் ஓர் அரசு எப்படி நியாயமாகும். இப்போ வேறு எந்த வழியும் இல்லாவிட்டால், இந்த நாடு சோமாலியா அல்லது இத்தியோப்பியாவின் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தால், திரைசேரி அடிமட்டத்திற்கே வத்தியிருந்தால் பரவாயில்லை என்று சொல்லாம், அப்படியில்லையே அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை வீண்விரயம் செய்து நாடகமாடுகின்றது. இன்று புரக்கோட்டையின் சந்தையை எடுத்து கொண்டால் சீன உற்பத்திகளால் நிரம்பியுள்ளது. இன்று பாங்கொக் சந்தையை போன்று தான் எமது சந்தைகளும்.

சீனாவின் விளையாட்டு பொருட்கள் உட்பட அனைத்தும் இறக்குமதி செய்வது உண்மை, அவற்றுக்கு தாக்கம் விளைவிக்கக் கூடிய அதற்கு ஈடான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தி சாலைகளை நிர்மாணிக்கும் திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை. தேசிய உற்பத்தியாளரை பாதுகாக்கும் திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை. இருப்பது எவ்வாறான திட்டம்? திரைசேரியின் செயலாளரின் காரியம் என்ன? பொதுமக்கள் அதிகளவாக பயன்படுத்துவது என்ன என்பதை பார்ப்பார். காலையில் எழும்பி பார்க்கிறார் இப்போ பிள்ளைகளுக்கு அதிகளவாக எதை அணிவிக்கிறார்கள் என்று பார்த்த போது அவருக்கு விளங்கியது பெம்பசை தான் அதிகளவாக அணிவிக்கிறார்கள் என்று, அப்போ பெம்பசுகளுக்கு வரிஅறவிட வேண்டும் என்று நினைக்கிறார். அதிகளவாக கையடக்க தொலைபேசிகளை (தொடர்ச்சி 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
464/20 பன்னிபிட்டிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## தவறிழைக்கக்கூடாத போராட்டத்தின் இலக்கு

நெருக்கடியின் முகட்டிலிருக்கும் இலங்கையின் தற்போதைய முதலாளித்துவ ஆட்சியில் அனைத்து துறைகளிலுமுள்ள மக்கள் கஷ்டப்படுகின்றனர். கஷ்டத்திற்கு உள்ளான மக்கள் கஷ்டங்களை சகித்துக் கொண்டிருப்பதைவிட அதற்கெதிராக போராடுவது சிறந்ததாகும். அமெரிக்காவில் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய கறுப்பினத் தலைவரான மார்டின் லூதர் கிங் கூறியதாவது: "நமது யுகத்தில் கவலைக்கிடமான நிலைமை என்னவென்றால் தீய மனிதர்களின் தீமையல்ல. நல்ல மனிதர்களின் மௌனமாகும்" அதன்படி மௌனித்திருப்பதைவிட போராடுவது சிறந்ததாகும். ஆனால் அவ்வாறு போராடும்போது அதன் குறிக்கோளும் இலக்கும் சரியானதாக இருப்பது அத்தியாவசியமானதாகும். ஏனென்றால், தவறான குறிக்கோள் மற்றும் தவறான இலக்குக்காக போன்றே நல்ல குறிக்கோளுக்காக தவறான இலக்குக்கு போராடுவது, போராடாமல் இருப்பதைவிட பயங்கரமானதாக இருக்கக் கூடும்.

மேற்கூறிய விடயங்களை மேலும் கவனத்தில் கொள்ளவேண்டியது அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட சில போராட்டங்களும் சில சம்பவங்களிலும் அந்தப் பிரச்சினையில் உள்ளடங்கி இருப்பதினாலாகும். அண்மையில் புகையிரதம் தாமதமானதால் சிரமத்திற்கும் கோபத்திற்கும் ஆளான பயணிகள் புகையிரத ஓட்டுனர்களையும் ஊழியர்களையும் தாக்கிய சம்பவங்கள் வெளியானது. புகையிரதம் தாமதமடைவதால் பிரயாணிகள் கோபமடைவது நியாயமானதே. அக் கோபத்தை சரியான இலக்கை நோக்கி வெளிப்படுத்துவது அத்தியவசியமானதாகும். ஆனால் பிரயாணிகள் தங்களின் கோபத்தை சாரதிகள் மீதும் ரயில்வே ஊழியர்கள் மீதும் வெளிப்படுத்துவது தவறானதாகும். அது இலக்குத் தவறிய போராட்டமாகும். அதில் மேலும் மகிழ்ச்சியடைவது வேறுயாருமல்ல இந் நெருக்கடிகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய ஆட்சியாளர்களாகும். அதனால் பாதிக்கப்படுவது வர்க்க ஒற்றுமையாகும்.

தற்போதைய முதலாளித்துவ ஆட்சி இலங்கையில் சகல பொதுத் துறைகளையும் நாசமாக்கியுள்ளது. அல்லது நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கிணங்க போக்குவரத்துச் சேவையையும் நாசமாக்குவது முதலாளித்துவ ஆட்சியாளர்களாகும். ரயில் சேவையை நடத்திச் செல்வதற்குத் தேவையான ஊழியர்களில் அரைவாசிப்பேரே உள்ளனர். ரயில் சாரதிகளின் பற்றாக்குறையும் நிலவுகிறது. நடத்துனர்கள் 326 பேரும் 128 சாரதிகளும் பற்றாக்குறை நிலவுகிறது. அது இவற்றை பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததினாலாகும். இந் நிலைமைகளின் கீழ் ரயில் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதன்போது அரசாங்கம் தமது பொறுப்பிலிருந்து விலகி சாரதிகள் மீது பழியைப் போடுகிறது. அதன்போது சாரதிகள் சட்டப்படி வேலையைச் செய்கின்றனர். அதன்போது ரயில் தாமதமடைகிறது. அதன்போது ஆத்திரமடைகின்ற பயணிகள் சாரதியையும் நடத்துனர்களையும் தாக்குகின்றனர். இறுதியில் நடந்திருப்பதென்ன? புகையிரதச் சேவையை நாசமாக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக தமது உரிமைகளுக்காக ஒன்றாகப் போராட வேண்டிய ரயில்வே ஊழியர்களும் பயணிகளும் அதற்குப் பதிலாக ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொள்வதும் ஆட்சியாளர்கள் பொறுப்பிலிருந்து மீண்டு சுதந்திரமாக இருப்பதே நடந்திருக்கிறது. போராட்டம் சரியாக வேண்டுமானால், அது நியாயமானதாக இருக்க வேண்டுமென்றால் போராட்டத்தில் இலக்கு சரியானதாக இருக்க வேண்டுமென நாம் குறிப்பிடுவது இதனாலாகும்.

போராட்டத்தில் இலக்கு பற்றிய விடயத்தின் போது மேற்கூறப்பட்ட உதாரணம் மட்டுமல்ல. கடந்த வருடத்தில் அரசாங்கம் மின்சார கட்டணத்தை அதிகரித்தபோதும் இவ்வாறு நடந்திருக்கிறது. மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி மக்களோடு சேர்ந்து போராடும் போது நாட்டில் சில இடங்களில் மீற்றர் வாசிப்போர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. மின்சார கட்டணத்தை அதிகரிக்கும் பொறுப்பு மீற்றர் வாசிப்போருக்கு கிடையாது. அவ்வாறு இருக்கையில் பாவனையாளர் அரசாங்கத்திற்கு எதிராக எதுவும் செய்யாது மீற்றர் வாசிப்போரை தாக்குவதினால் நன்மையடைவோர் பாவனையாளர்கள் அல்ல அரசாங்கமேயாகும். அதில் சற்றேனும் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அது மனு வாசிப்போர் தாக்கப்பட்டதினால் அல்ல. மக்கள் விடுதலை முன்னெடுத்த போராட்டத்தினாலாகும்.

முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு நன்மை ஏற்படுகின்ற, வர்க்க ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கின்ற, இந்த நிலைமைகளை மாற்றுவதற்கான காலம் உதியமாகியுள்ளது. தந்திரமான ஆட்சியாளர்களின் தந்திரத்திற்கு இரையாகி தமக்கிடையே எதிரான போராட்டத்தை நிறுத்தி ஒடுக்குமுறைக்குள்ளான அனைவரும் ஒற்றுமையாக எம்மை ஒடுக்கும், எமது உரிமைகளை பறிக்கின்ற முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக இணைந்து போராட முன்வர வேண்டும். போராட்டத்தின் இலக்கும் நோக்கத்தை சரியாக இனங்காண வேண்டியிருப்பது அதனாலாகும்.

## வடக்கின் எதிர்காலம்

யுத்த வெற்றியின் கொண்டாட்டம் அரசு இம்முறை மாத்தறையில் அரசாங்கத்தால் நினைவுகூறப்பட்டது. ஆனால் வடக்கில் வாழும் மக்கள் தாங்கள் தாங்களது இறந்துபோன பிள்ளைகளின் நினைவாக தாங்களும் நினைவு கூறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் ஆனால் அரசாங்கம் அதை தடைசெய்தது. யாழ் பல்கலைக்கழகம் காலவரையரையின்றி இழுத்து மூடப்பட்டது. அதை யும் மீறி செயற்படுவோருக்கு எதிராக இராணுவத்தை ஏவிவிட்டு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. சோதனைச் சாவடிகளை அமைத்து மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு தடைவிதித்தது. அரசாங்கம் இவைகளை ஜனநாயகத்தின் பெயரால் செய்து வருகிறது. இது மகிந்தரின் மகிமையாகும். அதாவது ஆசியாவின் ஆச்சரியமாகும்.

30 வருட யுத்தம் முடிவடைந்து 5 ஆண்டுகள் நிறைவடையும்போது அரசாங்கத்தின் செயற்பாடுகள் உச்சமடைந்துள்ளது. சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. காணாமல் போனோர் பற்றிய விபரங்களை இன்னமும் வெளியிடவில்லை. பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கு விமோசனம் பிறக்கவில்லை. அது பற்றி அரசாங்கம் கண்டுக்கொள்வதாக இல்லை. விதவைப் பெண்களின் பிரச்சினை, மீள்குடியேற்றம் போன்ற பிரச்சினைகளால் மக்கள் பாரிய இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இவைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டிய அரசாங்கம் தமது இருப்பினை கருத்தில் கோண்டு மக்களை வதைக்கிறது.

இதன் காரணமாக மீண்டும் வடபகுதி மக்களை பிரிவினைவாத எண்ணங்களால் மீள்லெழுச்சிப் பெறுவதற்கான சூழலை உருவாக்குவதை காண முடிகிறது. அதாவது மீண்டும் மக்களை இனவாத சாக்கடையில் அமிழ்த்துவதற்காக தேசிய மற்றும் வெளிநாட்டு சக்திகள் செயற்படுவதை காணமுடிகிறது. இது மீண்டும் வடபகுதி மக்களின்



எதிர்காலத்தை சிதைக்கும் செயலாகும்.

அவ்வாறானதாகும். முன்னாள் கிழக்கு மாகாண புலித் தலைவர் எழிலன் அவர்களின் மனைவி தனது கனவனின் இறுதிக் கடைமைகளை செய்வதற்கு தன்னை அனுமதிக்கும்படி அழுது புலம்பியதை ஊடகங்களில் காணமுடிந்தது. இவர் இன்று வட மாகாணசபை உறுப்பினராகும். ஒரு மாகாண சபை உறுப்பினருக்கு இவ்வாறான கதியென்றால் அப்பாவி மக்களின் நிலை எவ்வாறென்று எவருக்கும் புரிந்துக் கொள்ள முடியும்.

கடந்த ஐந்து வருடங்களாக வடக்கில் முறிந்துப்போயுள்ள மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்றுவருவதை காணக் கூடியதாயிருக்கிறது. அதேபோன்று இனங்களுக்கிடையிலான நல்லுறவு தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பவதற்கான நடவடிக்கைகளில் ராஜபக்ஷாவின் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. அதன் காரணமாகவே வடக்கு மாகாணசபையில் அரசாங்கம் பாரிய தோல்வியை தழுவியது.

இப்போது அரசாங்கம் வடக்கு மக்கள் மீது மேலும் அடக்குமுறைகளையே கட்டவிழ்த்துவிட்டு வருகிறது. அவர்கள் மீதான ஒடுக்குமுறை மென்மேலும் அதிகரித்திருக்கிறது. ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்துள்ளது. அது இறந்தவர்களுக்காக விளக்கேற்ற முடியாத நிலை வரையில்

இதற்கு அண்மையில் முடிவடைந்த இந்திய தேர்தல் முடிவுகள் சாட்சி பகர்கிறது. மோடியின் தேசிய ஜனநாயக கூட்டணி 543 ஆசனங்களில் 336 ஆசனங்களை வெல்லும்போது இந்திய தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் அ.இ.தி.மு.க 39 ஆசனங்களில் 37 ஆசனங்களை வெல்கிறது. இந்திய தேர்தலில் இலங்கை பிரச்சினை எப்போதும் பாரிய தாக்கத்தினை செலுத்திய வரலாறே உள்ளது. ஒரு பக்கத்தில் தனி தமிழ் ஈழத்திற்காக போராடிய போராடும் இந்திய தமிழ்நாட்டு கட்சிகளின் தலைவர்களான கோபாலசாமி, நெடுமாறன், திருமாவளவன், அனைவரும் பாரிய தோல்வியினை தழுவினர்.

இதுபற்றி இலங்கையில் சிலர் பெருமிதம் அடைவதை காணமுடிகிறது. ஆனால் ஜெயலலிதா தனது தேர்தல் அறிக்கையில் 08 கோரிக்கைகளில் 03 கோரிக்கைகள் இலங்கைப் பற்றியதாகும்.

அவை,

01. கச்சத்தீவை மீள இந்தியாவுக்கு பெற்றுக் கொள்ளல்.

02. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக தமிழ் ஈழமே என்பதை ஏற்றுகொள்வதுடன் அதற்காக உலக மற்றும் இலங்கையில் பொதுசன வாக்கெடுப்பொன்று நடத்தப்படமென்றும். அதற்கு தமது அ.இ.தி.மு.க வின் பூரண ஆதரவினை தெரிவித்தல்.

03. இலங்கையில்

(தொடர்ச்சி 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர் நீங்களே
# நாம் அனைவரும் அணிதிரண்டு
# புதிய போராட்டத்தை ஆர்பிப்போம்!

தேயிலை, இரப்பர் தோட்டங்களில் தமது வியர்வைச் சிந்தி உழைத்து நாட்டிற்கு அன்னியச் செலாவணியின் பெரும்பங்கை பெற்றுக்கொடுத்து இந்நாட்டிற்கு பெரும் பங்காற்றி வருவது தோட்டத் தொழிலாளர்களான நாமாகும். ஆனால் வாழ்க்கையில் வறுமையின் முகட்டிற்கே தள்ளப்பட்டுள்ளோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளம் வழங்கப்படவில்லையென ஆட்சியாளர்களே கூறுகின்றனர். அதேவேளை அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் துரித கதியில் அதிகரித்துச் செல்கிறது. பிள்ளைகளுக்கு பால்மா வாங்கவோ பிள்ளைகளின் கல்விச் செலவை பார்ப்பதற்கோ போதுமான வருமானமில்லாத நாம் நாட்டில் வேறு எவரும் முகம் கொடுத்திராத பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம். இரவில் இருந்த விலைவாசிகள் விடிந்ததும் அதிகரிக்கின்றபோது, இரண்டு வருடத்திற்கு ஒரு முறை கூட்டு ஒப்பந்தத்தால் அதிகரிக்கும் சொற்ப சம்பளத்தால் எமது வாழ்க்கைச் செலவில் அரைவாசியைக் கூட பூர்த்திச் செய்ய முடியாதுள்ளது. அரசாங்கமும் பெருந்தோட்ட கம்பனிகளும் தோட்ட மக்கள் நலமாக வாழ்வதாக கூறியபோதிலும், நமது குடும்ப செலவுகளில் அரைவாசியைக் கூட தேடிக்கொள்ள முடியாமல் மேலதிக வேலைகளை செய்தே எதையாவது தேடிக் கொள்ள வேண்டியுள்ளது. அரசாங்கம் சகலவற்றுக்கு வரி அறவிட்டு தோட்டக் கம்பனிகளிடமும் வரி அறவிடுகிறது. அந்த சுமைகளையும் தோட்டத் தொழிலாளர் மீதே ஏற்றப்படுகிறது. அவைகளை நிரப்புவதற்காக அரசாங்கமும் பெருந்தோட்ட கம்பனிகளும் நமது உழைப்பை மென்மேலும் சுரண்டுகிறது. இவைகள் இன்று நேற்று நடந்தவைகள் அல்ல. தோட்டத் தொழிலாளரது 180 வருட காலத்திற்கு மேலாக நடைபெறுவது இதுவாகும். காலங்கள் மாறுகிறது. உலகம் மாறுகிறது. ஆனால் தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுவதற்கு இடமளிப்பதில்லை.

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே. நமது வாழ்க்கையை மாற்றுவதாக கூறி நமக்குத் தலைமைத் தாங்கிய தொழிற்சங்கங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் மடியில் தவழ்கிறது. அவர்கள் தமக்கு மென்மேலும் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதெப்படி, கூடுதலான சலுகைகளை பெற்றுக் கொள்வதெப்படி என சிந்திக்கிறார்களே தவிர, தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் அரசாங்கத்திற்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் நம்மை மேலும் சுரண்டுவதற்கும் ஒடுக்குவதற்கும் இடமளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒடுக்குமுறையிலிருந்து நாம் மீள்வதா இல்லையா? இதை மாற்ற வேண்டாமா? நமது குழந்தைகளின் எதிர்காலத்தை வளமாக்க வேண்டுமா இல்லையா? நாம் இந்த முறையிலிருந்து மீள்வதா இல்லையா? ஆம் இந்த முறைமையை மாற்றியமைத்தாக வேண்டும். நாளைய தலைமுறையினருக்கு நல்லதொரு எதிர்காலத்தை பெற்றுக் கொடுத்தாக வேண்டும்.அதற்கான காலம் உதயமாகியுள்ளது. அதனால் தம்மை பற்றி மட்டும் சிந்திக்கும் தொழிற்சங்கங்களிலிருந்து மீண்டாக வேண்டும். அத் தொழிற்சங்கங்களிலிருந்து மீண்டு தொழிலாளர்களுக்காக போராடும் தொழிற்சங்கத்தில் இணைய வேண்டும். புதிதாக சிந்தித்து புதியதோர் பாதையில் காலடி வைத்தாக வேண்டும். ஆம், அதற்காக புதிய போராட்டத்திற்கு வலுவினை பெற்றுக் கொடுக்க அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் தயார்.

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே. ஒரு மாதத்திற்கு 150 ரூபாய் அறவிடுகின்ற தொழிற்சங்கங்கள் உங்களுக்கு ஒன்றையும் பெற்றுக் கொடுக்கவில்லை. சிந்தித்துப் பாருங்கள். உரிமைகளை வென்று கொடுக்கவில்லை. தொழிலாளர்கள் மென்மேலும் ஒடுக்குவதை தவிர வேறு எதையும் அவர்கள் செய்யவில்லை. ஆனால் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து குறைந்த சந்தாவை அறவிடும் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் புதிய முன்னுதாரணத்தை வெளிபடுத்தி உங்கள் பணம் மீண்டும் உங்களுக்கே கிடைக்கச் செய்யும் மரண சகாய நிதியத்தையும், சுகாதார நன்மை முறைகளையும் ஆரம்பித்துள்ளது.

எனவே சகோதர, சகோதரிகளே. இதுநாள் வரையில் மற்றவர்களுக்காக போராடிய வரலாற்றுக்கு முற்றுப் புள்ளியிடுவோம்.

# தீராத வீட்டுப் பிரச்சினை

“காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்” என்று புரட்சி கவி பாடிய பாரதியாரின் கனவு மலையக மக்களுக்கு கனவிலும் கூட தென்படுவதாக இல்லை. காணி மட்டுமா வீடும் இல்லையே இன்னமும் எட்டடி கொட்டில்களே எமது வாசஸ்தலமாக உள்ளது. அந்த கொட்டில்களிலிருந்து மீள்வதெப்போது என்று மலையக மக்களின் கேள்வியாக உள்ளது. 180 வருடங்களுக்கு மேலாக இந்நாட்டிற்காக தாங்களது வியர்வை, இரத்தம், எலும்புக் கூடுகளையும் உரமாக்கி இறுதியாக தாங்களது உயிரையும், இம் மண்ணுக்காக அர்பணித்த மக்களான தோட்டத் தொழிலாளிக்கு ஏன் இன்னமும் காணி உரிமை வழங்கப்படவில்லை. என்று கேள்வி இன்று மலையக மக்களிடம் அலையாக மோதுகிறது.

எம் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அவைகள் இருப்பிடப் பிரச்சினை, கல்வி, சுகாதாரம், தொழில், காலாசார பிரச்சினை போன்றவற்றுடன் 180 வருடங்களுக்கு மேலாக மாடாய் உழைத்து ஓடாய் தேய்ந்து வாழ்ந்து வருகிறனர். எம்மை காப்பாற்றுவதாக வந்த தொழிற்சங்க அரசியல் தலைவர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்து அமைச்சுப் பதவி, சலுகைகளை அனுபவித்து வருகின்றனர்.

2005ல் ஆட்சிபீடமேறிய மகிந்தரின் அரசாங்கம் வீடு தருவதாக, காணி தருவதாக, வீடுகட்ட கடன் தருவதாக என பல்வேறு உறுதிமொழிகளை வழங்கினர் ஆனால் 09 வருடங்கள் ஆன பின்னரும் அளித்த வாக்குறுதிகளில் ஒரு வாக்குறுதியேனும் நிறைவேற்றவில்லை. அந்த அரசாங்கத்தில் பங்காளிகளான தொண்டமான், திகாம்பரம் போன்றவர்கள் இவைகளை பற்றி பேசாது மௌனம் காத்து வருகின்றனர். அது மட்டுமல்ல கடந்த மத்திய மாகாணசபைத் தேர்தலின் போது தனி வீடு கட்டித் தருவதாகவும், தரிசு நிலங்களை வேலையில்லாதிருக்கும் எமது இளைஞர்களுக்கு தருவதாகவும், ஜனாதிபதி அவர்களே தேர்தல் மேடையில் உறுதிமொழி வழங்கினார். ஆனால் அவைகளும் வெற்று வாக்குறுதிகளாகவே அமைந்துள்ளன.

இதேபோல் ஒரு காலத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கொண்டுவரப்பட்டு இன்று அதுவும் பறிபோய், மத்திய மாகாண, ஊவா மாகாண கல்வி அமைச்சும் பறிபோய் இன்று மாட்டு அமைச்சுப் பதவியும், பெயரளவிலான பிரதி பொருளாதார அமைச்சுப் பதவியை வைத்துக் கொண்டு கேட்டுக் கொள்ளப்படுகின்ற ஒரு சில அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் எத்தனைதான் முழுமையடைந்துள்ளது? என்பது கேள்விக்குறியாகும்.



2011ல் அரசின். தனிவீட்டுத் திட்டம் அடிப்படையில் நாடு முழுவதிலும் ஐம்பதினாயிரம் வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் மலையகத்திற்கு 20.000 வீடுகளை புனரமைப்பதற்கு அன்றைய அரசினால் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு வழங்கப்பட்டது அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு நிதி ஒதுக்கி ஒரு தோட்டத்திற்கு 10 வீடுகளை அமைக்க நிதி வழங்கியும் இன்னும் இவ்வீடுகள் கட்டப்படவில்லை. இதன் ஒரு பகுதி நானுஓயா கிளரண்டன் மேற்பிரிவில் 10 வீடும் அதே தோட்டத்தில் எவேக்கா பிரிவில் 15 வீடுகளும் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டும் இன்னமும் இவைகளில் ஒன்றும் முழுமையடையவில்லை. ஆனால் இங்கு நாட்டப்பட்டுள்ள விளம்பரப் பலகையில் இவ்வீட்டுத் திட்டம் சரியாக ஒரு வருடத்தில் கட்டி முடிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மூன்று வருடங்களாகியும் இன்னமும் கட்டப்பட வில்லை. எனவே இவ்வீட்டுத்திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டதேன் என்று மக்கள் வினவுகின்றனர். இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது.? என்பது கேள்விக்குறியாக இருந்தாலும் இவ்வீட்டுத் திட்டத்திற்கு பொதுமக்களின் நாட் சம்பளத்தில் குறிப்பிட்டத் தொகை பணம் அறவிடப்படுகிறது.

அரசு நிதி ஒதுக்கீடு செய்தும் பொது மக்களிடம் நிதி அறவிடச்செய்தும் இன்னும் இவ்வீடுகள் புனரமைக்க முடியாதுள்ளதேன்? எனவே பொறுப்பு வாய்ந்த அரசியல் தொழிற்சங்கவாதிகள் அரசாங்கத்திற்கு வால் பிடிக்காமல் மக்களின் உரிமையான வீட்டுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது மக்கள் இதற்கெதிராக போராட வேண்டுமா? ஆம் மற்றவர்களுக்காக போராடியது போதும் நமக்காக நமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக போராட முன் வருவதன் மூலமே நமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியின் அளவும் முதலாளித்துவத்தின் தலைவிதியும்



இலங்கை முதலாளித்துவத்தின் நெருக்கடி தற்போது எளிய பொருளாதார நெருக்கடி எல்லையைக் கடந்து சிக்கலான சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார நெருக்கடியாக வளர்ச்சியடைந்துள்ளது. அதாவது முதலாளித்துவ முறை பிறப்பிலேயே அதற்கே உரிய இடத்தை அடைகிறது. அதாவது அதன் இறுதிப் பயணத்தை அடைந்துள்ளது. தற்போது நாடு முழுவதிலும் இடம்பெறும் குற்றச்செயல்கள், கொலைகள், தற்கொலைகள், சிறுவர்களைக் கூட கொல்லப்படுவதிலிருந்து வீதிகளில் காணக்கூடியதாயிருக்கும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களானது, நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சிகளினால், வளர்ச்சியடையும் அராஜக நிலைமையி-னாலும், அரசாங்கத்தின் உட்கட்சி நெருக்கடியும் கூறுவது அதையாகும். அதனால் தற்போதைய நெருக்கடியின் உண்மைத் தன்மையை இனங்காண்பது அத்தியாவசியமானதாகும்.

பழைய சமூகத்தை அகற்றிவிட்டு உருவாக்கப்படும் புதிய சமூக மாற்றத்திற்காக அத்தியவசியமான நிபந்தனைகள் உள்ளன. “எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது” எனும் புத்தகத்தில் தோழர் விஜேவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். “அவை-களை சுருக்கமாக இவ்வாறு குறிப்பிடலாம், அதில் முதல் அடிப்படையான விடயம் உற்பத்திச் சக்திகளுக்கு இனியும் நன்றாகச் செயற்பட முடியாதுவிட்டு சமூக முறையில் ஏற்படும் சீரழிவாகும். இரண்டாவது, ஆளும் வர்க்கம் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமையாகும். மூன்றாவது, மக்களால் சகித்துக்கொள்ள முடியாத விதமாக ஒடுக்கப்படுவதாகும். நான்காவது சமூக முறையை மாற்றுவதற்காக் மக்களுக்கு இருக்கும் விருப்பமும் இலட்சிய வேட்கையும். கடைசியாக ஐந்தாவது, சமூகச் சக்திகளை புரிந்துக் கொள்வதற்கு பயிற்சிபெற்றும், சமூக அசைவாக்க திசையை கணிப்பிட கூடியதுமான, பெரும்பான்மையின் விருப்பத்தை மறுதலிப்பதற்கு சிறுபான்மைக்கு இடமளிக்காமைக்கு உறுதிபூண்டுள்ள பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அரசியல் கட்சியின் இருப்பாகும். இவைகள் இன்றி செய்யக்கூடிய புரட்சி ஒன்று கிடையாது. ஒரு புறத்தில் ஆளும் வர்க்கம் பழைய வடிவத்தில் வாழ்வதற்கும் ஆட்சியை கொண்டுச் செல்ல முடியாமையுமாகும். அதாவது, மேலே எழுகின்ற நெருக்கடியும், மறுபுறத்தில் பழைய வடிவத்தில் வாழ முடியாத ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் கோபமும், அதாவது கீழே எழுகின்ற நெருக்கடியும் சமூக புரட்சிக்காக அத்தியவசியமான புரட்சிகர நிலைமைகளுக்காக முடியாமல் உள்ள அகநிலைக் காரணிகளாகும்”

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு எற்ப தற்போதைய இலங்கைச் சமூகத்தை பார்க்கும்போது தெரிவதாவது, மேற்கூறிய காரண-ிகள் இலங்கையில் மிக வேகமாக தோன்றி வருவதைக் காண முடிக-ிறது. இலங்கை எதிர்கொண்டுள்ள தற்பேதைய நெருக்கடியினுல் கீழே எழுகின்ற நெருக்கடியானது ஒடுக்கப்பட்ட வாக்கத்திற்கு பழைய வடிவத்தில் இனியும் வாழ முடிய-ாமை எனும் நெருக்கடிக்கு புறம்பாக மேலே தோன்றும் அதாவது ஆளும் வர்க்கத்திற்கு பழைய வடிவத்தில் இனியும் ஆளமுடியாதெனும் நெருக்கடியும் தோன்றியிருக்கிறது. அதாவது தற்போதைய முதலாளித்து முறையில் ஆளும் வர்க்கமும் அதேபோன்று ஒடுக்கப்பட்ட வர்க்கமும் நெருக்கடியில் அமிழ்ந்துப் போயுள்ளது.

இலங்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியினுல் பொது மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். விலைவாசி அதிகரிப்பு, வருமானத்திற்கான வழிகளின் வீழ்ச்சி, தொழிலின்மை, சேவைகள் மற்றும் நிவாரணத் துண்டிப்பு போன்ற காரணங்களினாலாகும். அதேபோன்று இந்த நெருக்கடியினுல் முதலாளித்துவ அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. கடந்த காலத்தில் உற்பத்தி மார்க்கங்களை பொருட்படுத்தாது, பாா-ியளவு கடன் பெற்றதினாலும், பே-ாலியான உல்லாசப் பயணத்துறைக்கு சகலவற்றையும் தாரைவார்த்ததினாலும், முதலாளித்துவத்தின் பொதுவான நெருக்கடியினாலும் தற்போது முதலாளித்துவ முறை பாா-ிய நெருக்கடியில் அமிழ்ந்துப் போயுள்ளது. தற்போது அரசாங்க் பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கிறது. அரச ஊழியர்களின் ஓய்வூதிய பணிக்கொடையையும் ஓய்வூதியத்தையும் சூரையாடுவதற்கும் தனியார்த்துறை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தையும் சூரையாடலுக்கான திட்டமிடலை மேற்கொள்வதன் மூலமாக அரசாங்கத்தின் நெருக்கடி எவ்வாறு உக்கிரமடைந்துள்ளதென்பதை புரிந்துக் கொள்ள முடியும்.

தற்போது நிதி நெருக்கடிகளுக்கு புறம்பாக அரசாங்கம் உட்கட்சி நெருக்கடியையும் சந்தித்து வருக-ிறது. கடந்த காலம் முழுவதும் நீரபூத்த நெருப்பாக இருந்த இந்நெருக்கடி அண்மையில் தெற்கு மற்றும் மேல் மாகாணசபைத் தேர்தலின் ஏற்பட்ட பின்னடைவும் மக்கள் விடுதலை முன்னணியின் வளர்ச்சியின் காரணமாக இப்போது உட்கட்சிபூசல் வெளிக்கிழம்பியுள்ளது. அதுநாள்வரையில் அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு மௌனமாக ஆதரவு தெரிவித்து வந்த ஆளும் கட்சியின் பங்காளிகள் இப்போது கலங்கமடைந்துள்ளனர். அது தமது இருப்பிற்காகவே தவிர மக்கள் நலனுக்காக அல்ல.

இப்போது அரசாங்கம் தொடர் தோல்விகளையே சந்தித்து வருகிறது. மாகாணசபைத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுடன் பாராளுமன்றத்திலும் பின்னடைவுகளை சந்தித்து வருக-ிறது. கெசினோ சட்ட மூலத்திற்கு பாராளுமன்றத்தில் கிடைத்த வாக்குகள், 109 ஆகும் சிலர் வாக்கெடுப்பை தவிர்த்தபோது சிலர் எதிர்த்தும் வாக்களித்தனர். வேறு நாட்களில் மேதின மேடையில் ஜனாதிபதிக்கு அருகில் நிற்பதற்கு முண்டியடிக்கும் கட்சிகள் இம்முறை வரவில்லை. மேதின மேடையில் ஜனாதிபதியின் தனிமைக்கு இருந்தவர் தினேஷ் குணவர்தன மட்டுமே. பே-ாலி நாடகத்தின் ஊடாகவேனும் தே.சு முனன்ணியும், ஹெல உரு-மயாவும் அரசாங்கத்திற்கு எதிரக கருத்துகளை தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அது அரசாங்கத்தின் நெருக்கடியை மேலும் தீவிரமடை-டய செய்துள்ளது. அண்மையில் ஐ.தே.க அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை கொண்டு வந்தது. (அது தோல்வியடைந்துவரும் அரசாங்கத்திற்கு வெற்றியொன்றைப் பெற்றுக் கொடுத்த முட்டாள் தனமான நடவடிக்கையாகும்) எவ்வாறாயினும் அதன்போதும் வாக்களிப்பதற்கு தே.சு முன்னணியும், ஹெல உருமயாவும் வரவில்லை.

இவைகள் அனைத்தும் அரசாங்கம் சிதைந்துள்ளதையே காட்டுகிறது. அதிகாரம் பலவீமடைந்தவுடன் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் தமது எதிர்கால் இருப்பினை கருத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளன. இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பதிலாக பிரச்சினை மென்மேலும் சிக்கலடையச் செய்துள்ளது. தே.சு முன்னணி தனத போலி நாடகத்தை மேடையேற்றும்போது அந்தக் கட்சியின் ஊவா மாகாண சபை இரண்டு உறுப்பினா விலகி ஒருவர் ஐ.தே.க விலும் மற்றோருவர் ஸ்ரீ.ல.சு கட்சியிலும் இணைந்தனர். இதிலிருந்து அரசாங்கத்தில் மட்டுமல்ல அதன் பங்காளிக் கட்சிகளிலும் நெருக்கடி தோன்றியுள்ளதையே காட்டுகிறது.

இதன்போது அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரான ரெஜினோல்ட் குரே அரசாங்கத்தை விமர்சித்த செய்தியொன்று அண்மையில் வெளியா-னது. அரசாங்கத்தின் உள்ளவர்கள் அரசாங்கத்தில் இருந்துக் கொண்டே அரசாங்கத்தை விமர்சிப்பது இப்போது கலையாக மாறியிருக்கிறது. “கப்பல்” கவிழ போகிறதென்பதை இவர்கள் புரிந்துள்ளனர்.“கப்பலை” பாதுகாப்பதற்கு முயற்சிக்கும் அதே-தவேளை தம்மை பாதுகாத்து கொள்வதற்காக உயிர் காக்கும் அங்கிகளை தேடிக் கொள்வதற்கான முயற்சியிலும் இறங்கியுள்ளனர். இவைகள் அரசாங்கத்திற்கு பாதகமா-னதே தவிர சாதகமானதல்ல.

இவைகள் இவ்வாறு நடந்துக் கொண்டிருக்குபோது நாட்டின் நிர்வாகம் அராஜக நிலையில் அமைந்துள்ளது. நாடு கட்டுப்பாடின்றி பழக்க தோஷத்தின் படி நகர்ந்து செல்கிறதென்பதை இப்போது அனை-வரும் உணர ஆரம்பித்துள்ளனா. ரயில் சேவை, இபோச சேவை இன்று கவலைக்கிடமான நிலையிலுள்ளது. சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகள் அதள பாதாளத்தில் அமிழ்கிறது. அரசாங்கம் நீதிமன்றத்தை மௌனமாக்கி பொலிசை அடிமையாக்கியுள்ளதன் காரணமாக முதலாளித்துவ

(தொடர்ச்சி 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விடுதலை
# மேதின தீர்மா

தொழிலாள வர்க்கத்திற்கு வரையறுக்கப்பட்ட எட்டு நேர வேலை நாளை வென்றெடுப்பதற்காக இற்றைக்கு 128 வருடங்களுக்கு முன்னர் சிக்காகோ நகரத்தில் நடைபெற்ற தொழிலாளர் போராட்டத்தை நினைவுகூர்ந்து உலகவாழ் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று சர்வதேச தொழிலாளர் தினத்தை நினைவுகூருகின்ற இத்தருணத்தில் முதலாளித்துவ சமூகமுறை சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியா-கவும் மீண்டெழ முடியாத பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

தனது வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பெரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து இறுதி கட்டத்தை அடைந்திருக்கும் முதலாளித்துவம் தனது வரலாற்றில் முகம்கொடுத்து நீண்ட பின்னடைவை 2008ம் ஆண்டிலேயே சந்தித்தது. 2008 செப்டெம்பரில் அமெரிக்காவில் ஆரம்பித்த இந்நெருக்கடி இன்னமும் உலகம் முழுவதும் படர்ந்த வண்ணமுள்ளது. வளர்ச்சியடைந்த முதலாளித்து நாடுகளை மூடிக்கொண்ட இப் பொருளாதார நெருக்கடியினால் தாக்கப்படுவது உழைக்கும் மக்கள் உட்பட தொழிலாள வர்க்கமே ஆகும். இந் நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்காக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் உட்பட முதலாளித்துவ நிதி நிறுவனங்கள் கையாண்ட அனைத்து போலித் தீர்வுகளும் கண்கூடாக தோல்வி அடைந்துள்ளதோடு அனைத்து முதலாளித்துவ ஆட்சிகளும் தமது நெருக்கடியின் சுமையை பொது மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாக தொழில்வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளதால், சம்பள கொடுப்பனவுகள் துண்டிக்கப்பட்டுள்ளதால், நலன்புரி சேவைகள், சலுகைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால், உயிர்வாழும் அடிப்படை உரிமைகளையும் இழந்து உலகளவில் மக்கள் அதற்கெதிராக வீதியில் இறங்கி முதலாளித்துவ முறைக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

நமது நாட்டை எடுத்துக்கொண்டாலும் தொடர்ந்தும் வங்குரோத்தடைந்த திறந்த பொருளாதார கொள்கை தந்திரோபாயத்திலேயே இழுத்து கொண்டு செல்லும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி, எமது நாட்டை பாரிய பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாச்சார நெருக்கடிக்குல் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. தமது இருப்பை பாதுகாப்பதற்காக பொருளாதாரத்தை கொள்ளையடித்தும் மோசடிச் செய்யும் சீர்கேடான நடவடிக்கைகளை பரப்பி ஜனநாயகத்தை அழித்து, மனித உரிமைகளை முறியடித்து, நீதிமன்றத்தை அடிமைபடுத்தி, பொலிசாரை செயலிழக்கச் செய்து, அராஜகத்தை கட்டவிழ்த்துவிடும் ராஜபக்ஷ ஆட்சி, ஏகாதிபத்திய சார்பு சர்வாதிகார குடும்ப ஆட்சியை நிலைநாட்டி வருகின்றது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முகம் கொடுக்கும் இந் நெருக்கடிகளை ஆழமாக கணிப்பீடு செய்யும் மக்கள் விடுதலை முன்னணி கீழ் வரும் தீமானங்களை இந்த அபிமானமிக செம் மேதின கூட்டத்தின் முன் வெளியிடுகின்றது.

**தேசிய துறை**

01) ஏகாதிபத்திய சர்பு வங்குரோத்தடைந்த திறந்த பொருளாதார தந்திரோபாயத்தில் எமது நாட்டு பொருளாதாரத்தை இழுத்து செல்லும் ராஜபக்ஷ ஆட்சி, நாட்டில் பெருமதி வாய்ந்த காணிகள் உட்பட தேசிய வளங்களை பல்தேசிய நிறுவனங்களுக்கு தாரைவார்த்து, கோடிக்கணக்கான பணத்தை கடனாக பெற்றுக் கொண்டு, மது, மாது, சூதாட்டத்தை அடிப்படையாக கொண்ட சீர்கேடான பொருளாதாரத்தை கட்டியெழுப்பி வருகிறது. பொதுமக்களின் உணவுப் பொருட்களுக்கு வரி அறவிடும் அரசு கெசினோ சூதாட்டத்துக்கு வரிச்சலுகை வழங்கும் சட்டங்களை குறுக்கு வழியில் கொண்டுவந்து அமுல்படுத்தி வருகின்றது. நாட்டுக்கு பாரிய தீங்கு விளைவிக்கும் அரசாங்கத்தின் இந்த பொருளாதார கொள்கையை மிக வன்மையாக கண்டிக்கும் இச்செம் மேதின கூட்டம் அதற்கு கண்டனம் தெரிவிப்பதற்காக அணிதிரளும்படி பாதிக்கப்பட்ட அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கிறது.

02) பொதுமக்களின் பணத்தை வீண்விரயம் செய்து, பெருமளவில் செலவுசெய்து நாட்டை பாரிய பொருளாதார நெருக்கடியில் தள்ளியிருக்கும் ராஜபக்ஷ அரசாங்கம் பொதுமக்கள் மீது பாரிய வரிச்சுமையை ஏற்றியுள்ளது. இதனால் மக்களின் அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது. இவ்வாறு பொதுமக்கள் மீது சுமத்தும் பாரிய வரிச்சுமையை நிறுத்தும் படியும், உயர்த்தப்பட்ட மின்கட்டனம், எரிபொருள் விலைகள் உள்ளிட்ட அனைத்து பொருட்களினதும், சேவைகளினதும் விலையை குறைக்கும் படி இச் செம் மேதின கூட்டம் அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.

03) உழைக்கும் மக்கள் கே-ாரிய சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்காத அரசாங்கம், விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்குவதை நிராகரித்து வருகிறது. எனவே அரச, தனியார்துறை, தோட்டதுறையில உழைக்கும் மக்களின் சம்பளத்தை உயர்த்தும் படியும், விவசாயிகளின் உற்பத்திகளுக்கு உறுதியான விலையை நிர்ணயித்து அவர்களுக்கு சலுகைகள் வழங்கும் படியும், விவசாய மற்றும் மீனவர் ஓய்வூதியத்தை வழங்கி மீனவர்களுக்கு சலுகைகள் வழங்கும் படியும், ஓய்வூதிய பெறுநர்களின் கொடுப்னவை துண்டிக்கும் முயற்சியை உடனடியாக நிறுத்தும் படியும், இளைஞர், யுவதிகளிக்கு தொழில் வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் இச் செம் மேதின கூட்டம் அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

04) பொதுமக்களின் உரிமையான இலவச சுகாதாரச் சேவை மற்றும் இலவச கல்வி துறையை துண்டிப்பதை உடனடியாக நிறுத்தும் படியும், சுகாதாரத் துறை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உடன-டியாக நடவடிக்கை எடுக்கும் படியும், இலவசக் கல்வியை அழித்து தனியார் பல்கலைக்கழகங்கள் நிர்மாணிப்பதை நிறுத்தும் படியும், கல்வித் துறைக்கு மொத்த தேசிய வருமானத்தில் 6 சதவீதத்தை ஒதுக்கும் படியும், அரச பல்கழைக்கழகங்களை விரிவுபடுத்தி உயர்தரத்தில் தகுதிபெற்ற அனைவருக்கும் உயர்கல்வியை கற்கும் உரிமையை உறுதிபடுத்தும் படியும், இச் செம் மெதின கூட்டம் அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

05) ஏகாதிபத்தியத்துக்கு சார்பான, சர்வாதிகார, குடும்ப ஆதிக்கத்தை கட்டியெழுப்பும் ராஜபக்ஷ ஆட்சி, நீதிமன்றங்களை கட்டுப்படுத்தி, பொலிசாரை மௌனமாக்கி, சட்டத்தை பொருட்படுத்தாது எதிர்தரப்பினருக்கு எதிராக அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு, தமக்கு சார்பான மோசடிக்காரர்களை விடுவித்து கொண்டுச் செல்லும் ஜனநாயகத்திற்கு மா-றான, தான்தோணத்தனமான ஆட்சியை வன்மையாக கண்டிக்கும் இச் செம் மேதின கூட்டம், ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரையும் கேட்டு நிற்கிறது.

06) எமது நாட்டிற்கு பாரிய தீமைகளை விளைவிக்கும் மற்றும் சர்வாதிகார போக்குகளுக்கு வழிதிறந்து வைக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படி இச் செம் மேதின கூட்டம் ஜனாதிபதி உட்பட இந்த அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.




07) தமக்கு அடிபணியாத ஊடக நிறுவனங்களை தாக்கி தீயிட்டு, ஊடகவியலாளர்களை தாக்கி, கடத்திசென்று கொலைசெய்த அரசாங்கம், ஊடகங்களை அச்சுறுத்துவதோடு கட்டுப்படுத்தவும், பணத்திற்கு அடிமைப்படுத்தக் கூடிய ஊடக நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் விலைகொடுத்து வாங்கி அல்லது கட்டுப்படுத்தி தகவல்களை பெற்று கொள்ளும் உரிமைக்கு பங்கம் விளைவித்து ஜனநாயகத்திற்கு வி-ரோதமாக செயல்பட்டு வருகின்றது. சர்வாதிகாரத்தின் அறிகுறிகளை பிரதிபலிக்கும் அரசி ன் இந் நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கும் இச் செம் மேதின கூட்டம் ஊடக அடக்கு முறையை நிறுத்தும் படியும், மக்களுக்கு தகவல்களை அறிந்து கொள்ளவிருக்கும் சுதந்திரத்தை உறுதிசெய்யும் படியும் அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது.


08 வடக்கு, கிழக்கு பகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாத அரசு வடக்கில் தொடர்ந்தும் இராணுவ ஆட்சியை நடாத்தி வருகின்றது. மீண்டும் பிரிவினைவாதத்திற்கும், வெளிநாட்டு தலையீடுகளுக்கு வழியமைக்கும் அரசின் இந்த மூடத்தனமான நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கும் இச் செம் மேதின கூட்டம், வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கும் படியும் அரசாங்கத்தை வற்புறுத்தி நிற்கிறது.

09) இலங்கைக்கு அண்ணியச் செலாவணியை ஈட்டிதரும் மத்தியகிழக்கு, ஐரோப்பா, தென்கொரியா, யப்பான் ஆகிய நாடுகளில் பணிபுரியும் நபர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்கு உடன-டியாக நடவடிக்கை எடுக்கும் படி இச் செம் மேதின கூட்டம் அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

10) மக்களிடையே ஒற்றுமையை சீருலைத்து இனங்களுக்கிடையே மதவாத, இனவாத கலவரங்களை நிர்மாணிப்பதற்காக முயற்சிக்கும், ராஜபக்ஷ ஆட்சியின் அனுசரனையுடன் இயங்கும் மத அடிப்படைவாதங்களையும், அதிகாரத்தை பாதுகாத்து கொள்வதற்காக பல்வேறு குழுக்களினால் பரப்பும் இனவாதங்களையும் நிராகரிக்கும் படியும், அவற்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணியின்
# ானங்கள்




இரையாக வேண்டாம் என்றும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர், மலே ஆகிய மக்களிடம் கேட்டுக்கொள்கிறது.
11) இந்த அரசாங்கம் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கி தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு தகுதியற்றதினாலும், தேசி ய பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆரம்ப அணுகுமுறைகளையாவது கடைபிடிக்காததாலும் அதிகாரத்தை பாதுகாத்து கொள்வதற்காக மனித உரிமைகளை மீறி, ஜனநாயகத்தை கட்டுப்படுத்தி அரசு கொண்டுசெல்லும் தான்தோன்றித் தனமான சர்வாதிகார குடும்ப ஆட்சியின் காரணத்தினாலும், ஏகாதிபத்திய சக்திகளுக்கு பிரிவினைவாத சக்திகளுக்கு மீண்டும் உயிரூட்டுவதற்கும் எமது நாட்டு உள்ளக பிரச்சினைகளில் தலையிடுவதற்கும் வழியமைத்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா உட்பட ஏகாதிபத்தியம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் ஒன்றன்பின் ஒன்றாக இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை கொண்டுவந்ததும் அதனை சார்ந்த செயல்பாடுகளும் இதற்கு உதாரணங்களாகும். மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் உள்ளக பிரச்சினைகளில் தலையிடும் அமெரிக்கா உட்பட ஏகாதிபத்திய சக்திகளின் முயற்சிகளையும், இலங்கையில் உள்ளக பிரச்சினைகளில் தலையிடுவதற்கு வழியமைக்கும் இன்றைய ஆட்சியின் ஜனநாயக விரோத, மனிதநேயமற்ற நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கும் இந்த செம் மேதின கூட்டம், ஏகாதிபத்திய தலையீட்டையும் நாட்டில் தலைதூக்கும் ஜனநாயக விரோத சர்வாதிகார ஆட்சியையும் ஒன்றாக தோற்கடிப்பதற்கு அணிதிரளும் படி உண்மையான தேசப்பற்றுள்ள, முற்போக்கு மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளிடம் கேட்டு நிற்கின்றது.
12) இலங்கை முகம் கொடுத்திருக்கும் பாரிய பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார நெருக்கடிகளுக்கு முதலாளித்துவ ஆட்சியில் தீர்வுகள் இல்லை எனவும், அவற்றை இன்னும் வளர்க்கவே முதலாளித்து ஆட்சியினால் முடியும் என்பதையும் வலியுறுத்தும் இச் செம் மேதின கூட்டம், இந்நாட்டு வங்குரோத்தடைந்த முதலாளித்து ஆட்சியையும், அதனை கட்டிக்காக்கும் ஏகாதிபத்தியத்தையும் தோற்கடித்து நவீன சோஷலிசத்துக்காக மக்கள் ஆட்சியை கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையும் படியும், அதற்காக ஏகாதிபத்திய எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு பாரிய மக்கள் சக்தியை கட்டியெழுப்புவதற்காக அணிதிரளும் படியும் அனைத்து மக்களிடமும் கேட்டு நின்கின்றது.

**வெளிநாட்டு துறை**

01) ஏகாதிபத்தியவாதிகள் 1914ல் முதலாம் உலகப் போரை ஆரம்பித்து நூறு வருடங்களை கடக்கும் 2014மான இவ்வருடமாகும் போது ஏகாதிபத்தியவாதிகள் மரணநிலையிலான நெருக்கடிக்கு இரையாகி வருகின்றது. கடந்த நூற்றாண்டு காலப்பகுதியில் மனித வர்க்கம் இரண்டாவது உலகப் போருக்கும் ஏகாதிபத்தியவாதிகள் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒவ்வொரு வலயங்களின் போர்களுக்கும் முகம்கொடுத்தது. இதுநாள் வரையும் ஏகாதிபத்தியம் இரையாக்கி கொண்ட மனித உயிர்களும், இயற்கை வளங்களும் எண்ணில் அடங்காது.
ஆனால், ஏகாதிபத்தியவாதிகள் இத்தருணத்தில் முகம்கொடுக்கும் மரண நெருக்கடியின் முன் மனித வர்க்கத்தை மூன்றாம் உலக போருக்கு தள்ளப்படும் அபாயத்தை குறைவாக மதிப்பிட முடியாது.
அமெரிக்க ஏகாதிபத்திய உட்பட அனைத்து ஏகாதிபத்தியத்திய சக்திகளும், கொடூரமான சியொன்வாதமும் இணைந்து நிர்மாணித்துள்ள சியொன்வாத அசுத்த கூட்டு கடந்த காலங்களில் ஈராக், லிபியா, சிரியா உட்பட பல நாடுகளுக்கு எதிராக பொய்களை பரப்பி நடத்தி வருகின்ற பாரிய அழிவுகளையும் அந்நாடுகளுக்கு உரித்தான பெற்றோலிய வளம் உட்பட அனைத்து வளங்களையும் சூறையாடுவதை உற்று நோக்கினால் மூன்றாம் உலகப் போரின் அபாயம் உண்மையாகவே தென்படுகின்றது.
என்றாலும் இந்த ஏகாதிபத்திய மற்றும் சியோன்வாத கூட்டை தோற்கடிக்க முடியாத ஒன்றல்ல. தோற்கடிப்பது கட்டாயச் செயலாகவும் உள்ளது. எனவே உலகளவில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்கள் இத்தருணத்தில் மேற்கொண்டுவரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, சியோன்வாத எதிர்ப்பு பாரிய போராட்டம் இன்னும் பலமாக முன்னோக்கி செல்ல வேண்டும் என வலியுறுத்தும் மக்கள் விடுதலை முன்னணியின் இச் செம் மேதின கூட்டம், அந்த போராட்டத்தை நிபந்தனையின்றி ஆதரிக்கின்றது.
02) யுத்தவாத ஐக்கிய அமெரிக்கா இன்றைய காலகட்டத்தில் முகம் கொடுக்கும் பாரிய நெருக்கடியின் மத்தியில் இழந்து வரும் உலக "உலக பொலிஸ்காரன்" என்ற அந்தஸ்தையும், பொருளாதாரத்தையும் பாதுகாத்து கொள்வதற்காக பென்டகன் யுத்த திட்டங்களுக்கு அமைய உலகில் எல்லா வலயங்களிலும், இராணுவத்தினரை, ஆயுதங்களை குவிப்பதற்காக பிலிப்பைன், யூக்ரேன், இலங்கை மற்றும் இன்னும் பல நாடுகளில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் எதிர் காலத்தில் சர்வதேச கடல் மார்க்கங்களை தடைசெய்வதற்கும், அதற்கு அடிபணியாத நாடுகளை ஆக்கிரமிப்பதற்கும், தேவையான அளவு உலக பொருளாதார நடவடிக்கைகளை சிக்கலாக்குவதற்கும், மேற்கொண்டுள்ள சூழ்ச்சிகளை கண்டிக்கும் இச் செம் மேதின கூட்டம் அவற்றை தோற்கடிப்பதற்காக தத்தமது நாடுகளில் நிலைநாட்டப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ முகாம்களை அகற்றி கொள்ளும் படியும், வற்புறுத்துவற்காக அணிதிரளும் படியும் உலகவாழ் மக்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம்.
03) வடகொரிய ஜனநாயக குடியரசினால் அமெரிக்காவுக்கு, அதன் தூய்மையான உரிமைக்கு அச்சுறுத்தல் இல்லாத தருணத்தில் அதன் அயல்நாடான தென்கொரியாவில் அமெரிக்காவின் இராணுவத்தினரையும் ஆயுதங்களையும் குவித்துள்ளது, 61வருடங்களுக்குள் ஒவ்வொரு சந்தர்பங்களில் தென்கொரியாவுக்கு எதிராக ஆத்திமூட்டல், பயமுறுத்தல்கள் மற்றும் பயங்கரமான யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சிப்பதையும் வன்மையாக கண்டிக்கும் இந்த செம் மேதின கூட்டம், தென் கொரியாவின், ஒக்கினாவா தீவிலிருந்து, குவாமி இராணுவ முகாமிலிருந்து ஏகாதிபத்திய இராணுவத்தினரை அகற்றிக் கொள்ளும் படி, வற்புறுத்துவதோடு வடகொரியாவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை தெரிவிக்கிறது.
04) ஈராக்குக்கும், லிபியாவுக்கும் எதிராக பாரிய பொய் பிரச்சாரங்களை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையையும் திசைதிருப்பி அந்நாடுகளின் இலட்சக் கணக்கான மக்களையும் அவற்றின் அடிப்படை வசதிகளையும் அழித்து, யுத்தம் செய்த ஏகாதிபத்திய, சியோன்வாத கொடூர கூட்டு, அவ்விரண்டு நாடுகளின் பெற்றோலிய வளத்தையும் சூறையாடியது. இதேபோன்று ஈராக்கின் எண்ணெய் வளத்தை சூறையாடுவதற்கு கொடூர கூட்டு மேற்கொண்ட சூழ்ச்சியை முறியடிக்கும் திறமை ஈரானுக்கு இருந்தது. ஈராக்கையும், லிபியாவையும் தாக்கிய எதிரி சக்திகளை வன்மையாக கண்டிக்கும் இந்த செம் மேதின கூட்டம், ஏகாதிபத்தியத்துக்கு எதிராக பெற்றுகொண்ட ஈரானின் வெற்றிக்கு மதிப்பளிக்கின்றது.
05) அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதலை, அனுசரனையை பெற்று, வெனிசுலாவில், பொலிவியாவில் மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆட்சியை கைப்பற்றிய பிற்போக்கு அரசாங்கங்கள் அந்நாட்டு மக்களினால் தோற்கடிக்கப்பட்டது. அதன் பின் மக்களினால் ஆட்சியதிகாரத்தில் ஏற்றிய மக்கள்மய, முற்போக்கு அரசாங்கங்களை பலவந்தமாக வீழ்த்துவதற்கு அமெரிக்காவும் குறிப்பிட்ட நாடுகள் மேற்கொண்டுள்ள சூழ்ச்சிகளை கண்டிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் செம் மேதின கூட்டம், அந்நாடுகளின் முற்போக்கு ஆட்சிகளுக்கும் மக்களுக்கும் நிபந்தனையற்ற ஆதரவை தெரிவிக்கின்றது.
06) அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு நாளுக்கு யுத்த நடவடிக்கைகளுக்காக ஒரு லட்சம் கோடி டொலர்களை செலவழிக்கின்றது. ஆனால் கடன்சுமையில் உள்ள அமெரிக்கா இவ்வுலகின் பலநாடுகளை வெளிநாட்டு கொடுக்கல் வாங்களுக்கு பயன்படுத்தும் டொலர் வைப்பகம் அங்கு உள்ளதாலேயே இவ்வாறு செய்கின்றது. இத்தருணத்தில் உலகில் 23நாடுகள் வெளிநாட்டு கொடுக்கல் வாங்களில் டொலரை கைவிட்டுள்ளது. உலகில் இன்னும் பல நாடுகள் குறிப்பாக பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள் நாம் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கள்களுக்கு டொலரை பயன்படுத்தமாட்டோம் என முடிவெடுக்க முடியுமானல் ஏகாதிபத்தியத்தின் முள்ளந்தண்டை முறிக்க முடியும். அதிலிருந்து ஏகாதிபத்தியத்தின பயணம் அதிக தொலைவில் இல்லை என்பது உறுதியாகும்.
அதனால் வெளிநாட்டு கொடுக்கல் வாங்களில் டொலரை கைவிடுவதற்கு துணியுங்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் இச் செம் மேதின கூட்டம் உலகில் பலம் வாய்ந்த பொருளாதாரத்தை உரித்தாக்கியிருக்கும் அமெரிக்க எதிர்ப்பு நாடுகளை அழைக்கின்றது.
07) மனித வர்க்கத்திற்கும் சூழலுக்கும் பாரிய அழிவை ஏற்படுத்திய, எதிர்காலத்திலும் இயங்கவுள்ள ஏகாதிபத்தியத்தை இம்மண்ணிலிருந்து துடைத்தெறிவதற்கு, சோஷலிசத்தை வென்றெடுப்பதற்கு அணிதிரளும்படி உலகவாழ் கம்யூனிஸவாதிகளுக்கும், முற்போக்காளர்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும், மனிதநேயமுள்ள மற்றும் சூழல்விரும்பிகளுக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் செம் மேதின கூட்டம் இவ் உலக தொழிலாளர் தினத்தில் அறைகூவல் விடுக்கிறது..

அரசியற்குழு
மக்கள் விடுதலை முன்னணி
2014 மே 01
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பிரளயத்தின் தோற்றம் 01

## மக்கள் விடுதலை முன்னணி தோன்றியது எப்படி?

1965 மே 14ம் திகதி வெசாக் பௌர்ணமி தினமாகும் அந்நாள் சிறப்புபெறுவது அதனால் அல்ல. காலி மாவட்டத்தில் அக்மீமன பகுதியில் ஒரு தொழிலாளியின் வீட்டில் ஒன்றுகூடிய ஏழு இளைஞர்கள் இலங்கைக்கு புதிய புரட்சிவாத இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலை ஆரம்பித்தது அன்றைய தினத்தில் என்பதினாலாகும். இந்த இளைஞர் குழுவின் கலந்துரையாடலை வழிநடத்தியவர் அப்போது 22 வயது நிறம்பாத தோழர் ரோகண விஜேவீராவாகும். மக்கள் விடுதலை முன்னணி எனும் அரசியல் இயக்கத்திற்கு பிறப்பை பெற்றுக்கொடுக்கும் கதையின் ஆரம்பம் அதுவாகும்.

மக்கள் விடுதலை முனன்ணி எனும் பெயரில் பிற்காலத்தில் போற்றப்படும் இந்த புதிய புரட்சிகர இயக்கத்தின் தோற்றமானது தனிநபர் பிடிவாதத்தின் விளைவாகவோ தற்செயலானதோ அல்ல. நிலையான சமூக வரலாற்று தேவையினை நிறைவேற்றுவதை நோக்கமாக கொண்டதாகும். மக்கள் விடுதலை முன்னணி உதயமாவதற்கு வழிசமைத்த தேசிய மற்றும் சர்வதேசிய தளத்தில் தோற்றம் பெற்றிருந்த நிலமைகளும் காரணமாக அமைகிறது. தேசிய மற்றும் சர்வதேசிய தள அரசியலில் தோற்றுவித்த காரணிகளும் மக்கள் விடுதலை முன்னணி தோற்றத்திற்கு காரணமாக அமைகிறது.

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம் 1935 லங்கா சமசமாஜக் கட்சியின் தோற்றமாகும். லங்கா சமசமாஜக் கட்சியை உருவாக்கியதன் மூலம் தோற்றம்பெற்ற இலங்கை இடதுசாரி இயக்கமானது ஆரம்பம் முதல் அதன் நிர்மாணகர்த்தாக்களிருந்து அவர்களின் கருத்தியல், கொள்கை மற்றும் நடைமுறையிலும் சிறுமுதலாளித்துவ சீர்திருத்தவாத இயக்கமாக இருந்து வந்துள்ளது. பழைய இடதுசாரி இயக்கம் ஒருபுறத்தில் பல குழுக்களாக பிளவுபட்டிருந்ததுடன் மறுபுறத்தில் பாட்டாளி வர்க்கத்தை காட்டிக் கொடுப்புளிலும் ஈடுபட்டிருந்தனர். அதன் ஒரு தீர்க்கமான கட்டமாக 1964 தொழிலாளர் வர்க்கத்தின் 21 அம்ச கோரிக்கை காட்டிக் கொடுப்பாகும். இந்நிலமைகளின் கீழ் தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் தோற்றம் பெற்றிருந்த அரசியலின் அகநிலை மற்றும் புறநிலை காரணகளும் இலங்கையில் புதிய இடதுசாரி இயக்கம் தோன்றுவதற்கான சந்தர்ப்பம் தோற்றம் பெற்றிருந்தது. மக்கள்' விடுதலை முனன்ணியின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்த தேசிய மற்றும் சர்வதேசிய அரசியல் நிலமைகளை இவ்வாறு சுறுக்கமாக குறிப்பிட முடியும்.

சர்வதேச மட்டத்தில் 1963ல் ஏற்பட்ட சீன சோவியத் கருத்து முரண்பாடு முக்கிய இடத்தை வகிக்கிறது. அதுநாள்வரையில் உலக சோஷலிச இயக்கத்தில் இணைப்பிரியா நண்பர்களாக இருந்து உலகம் முழுவதிலிமிருந்த புரட்சிவாதிகளுக்கு அவரணைப்பையும் ஆதரவின்னையும் அளித்துவந்த சீனாவும் சோவியத் யுனியனும் 60ம் தசாப்த ஆரம்பத்தில் கருத்தியல் மற்றும் அதிகாரப் போட்டியை ஆரம்பித்து. 1963ல் இரண்டு எதிரி அரசுகளாக மாற்றமடைந்தது. இந்த சீன சோவியத் முரண்பாடுகளுடன் உலகம் முழுலதிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் சீன சார்பு சோவியத் சார்பு குழுக்களாக பிளவுப்பட்டன. எஸ்.ஏ விக்கிரமசிங்காவும் பீட்டர் கெனமனின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சார்பாக செயற்படும்போது அதிலிருந்து விலகிய பிரேமலால் குமாரசிரியும் சண்முகதாசனும் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்பினர். இப் பிளவுகளின்போது உலகம் முழுவதிலும் போர்குணமிக்க 'ரெடிகல்' இளம் கம்யூனிஸ்ட்டுகள் மிகவும் போர்குணத்தை வெளிப்படுத்திய சீனாவுக்கு சார்பான பக்கத்தை எடுத்தனர். இக்காலத்தில் சோவ ியத் ரஷ்யாவில் லுமும்பா பலகலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவனாக கல்வி கற்றுக் கொண்டிருந்த தோழர் ரோகண விஜேவீராவும் சீனாவுக்கு சார்பாகவே செயற்பட்டார். சீனாவும் சோவியத் யூனியனும் பரஸ்பரம் தமது கொள்கை தொடர்பான கருத்து முரண்பாடுகளிலில் ஈடுபட்டு தாங்கள் தாங்களே உண்மையான மார்க்ஸ் லெனின்வாதிகலென அறிக்கை விடுவதால் இளம் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் இந்தக் கருத்தியல் போராட்டத்தில் ஈடுபட்டதினால் அவர்களுக்கு உண்மையான மார்க்ஸ் லெனின்வாதம் பற்றி ஆழமாக கற்பதற்காக இந்நிலமை வற்புறத்தியது. அதனால் இந்தக் கருத்து முரண்பாடுகள் பற்றி பாரிய ஆய்விற்காகவும் மீண்டும் மார்க்ஸ் லெனின்வாதத்தை கற்பதற்கும் வாசிப்பதற்குமான வழியை ஏற்படுத்தியது. அதன் விளைவாக புதிய புரட்சிகர இயக்கம் தோன்றுவதற்கான சூழல் தோற்றம் பெற்றது.

ஒரு புறத்தில் சீன சோவ ியத் கருத்துப் போராட்டம் உலகம் முழுவதிலும் கருத்தியல் எழுச்சியை எற்படுத்தியதோடு மறுபுறத்தில் அப்போது ஆசியா, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்க, போன்ற நாடுகளில் விடுதலை போராட்டம் எழுச்சியடைந்து அவைகள் வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதும் இளைஞர்களுக்கு பெரும் உற்சாகத்தை வரவழைக்கும் காரணியாக அமைந்தது. ஆபிரிக்காவில் கொங்கோ, அல்ஜீரியா, அங்கோலா, மொசம்பிக், போன்ற நாடுகளில் போன்றே ஆசியாவில் வியட்னாம் உள்ளிட்ட இந்துசீனாவிலும் இலத்தின் அமெரிக்க நாடுகளான நிக்கரகுவா, எல்சல்வதோர் போன்ற நாடுகளிலும் தேசிய விடுதலை போராட்டம் முன்னோக்கி நகர்ந்துக் கொண்டிருந்தது. 1959ல் கியூபா புரட்சியின் வெற்றியானது குறிப்பாக இலத்தின் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு உற்சாகமும், சர்வதேசவாத ஒத்துழைப்பினையும் பெற்றுக் கொடுத்ததோடு இந்த சம்வங்கள் அனைத்தும் உலகம் முழுவதிலும் இளம் புரட்சியாளர்களுக்கு ஊக்கத்தையும் வலுவினையும் அளித்தது. இந்த நிலமைகள் புதிய இடதுசாரி இயக்கத்தை உருவாக்குவதற்கு காரணமாக அமைந்ததுடன் மக்கள் விடுதலை முனன்ணியின் தோற்றத்திற்கு சர்வதேச அரசியலின் இவ்விடயங்கள் காரணங்களாக அமைந்தது.



தேசிய ரீதியில் எடுத்துக்கொண்டால் இந்த காலம் இலங்கை பின்தங்கிய முதலாளித்துவ முறைமை பாரிய நெருக்கடியில் அமிழ்ந்திருந்த சந்தர்ப்பமாகும். 1960களில் ஆட்சிபீடமேறிய ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கம் 1964களில் பாரிய நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்ததால் வரவு செலவுத் திட்ட அறிக்கையை தயாரிக்க முடியாது 04 நிதியமைச்சர்கள் பதவிலகும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருந்தது. அதன்போது அதுநாள்வரையில் பிளவுபட்டிருந்த இடதுசாரிகள் லங்கா சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி இணைந்து இடதுசாரி ஐக்கிய முன்னணியை உருவாக்கினர். அதேபோன்று சகல தொழிற்சங்கங்களையும் இணைத்து தொழிற்சங்க மத்திய நிலையத்தையும் கட்டியெழுப்பினர். அவர்கள் அரசாங்கத்திற்கு 21 அம்ச கோரிக்கைகளை முன்வைத்ததோடு பின்னர் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் இருந்த லங்கா சமசமாஜக் கட்சி 21 அம்ச கோரிக்கைளை காட்டிக் கொடுத்து, இடதுசாரி ஐக்கிய முன்னணியை உடைத்து 3 அமைச்சுப் பதிவிகளுக்கும் 2 பிரதியமைச்சர் பதவிகளுக்காவும் ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கத்துடன் இணைந்தது.


இது இலங்கை இடதுசாரி இயக்கத்தில் இடம்பெற்ற மாபெரும் காட்டிக் கொடுப்பாகும். அது இடதுசாரி இயக்கத்தில் பாரிய நெருக்கடிகளை தோற்றுவித்தது. பாட்டாளி வர்க்கத்தின் தேவைக்காக, சார்பாக இருக்க வேண்டிய இடதுசாரி இயக்கம் அவ்வாறு வர்க்கத்தை காட்டிக் கொடுத்து முதலாளித்துவ அரசாங்கத்தின் பங்காளிகளாக மாறும்போது இடதுசாரி இயக்கத்துக்கான வெற்றிடம் ஏற்படுகிறது. 1964ல் சமசமாஜ தலைவர்கள் ஸ்ரீ.ல.சு.கட்சியில் இணைந்ததினால் அச்சந்தர்ப்பத்தில் உண்மையான புரட்சிகர இடதுசாரி இயக்கத்தின் தேவை ஏற்படுகிறது. இடதுசாரி இயக்கம் வலதை நோக்கி நகரும்போது புதிய இடதுசாரி இயக்கத்துக்கான தேவை மேலோங்குவது தவிர்க்க முடியாததுடன் மக்கள் விடுதலை முன்னணி உருவானது அத்தேவையை பூர்த்தி செயதற்கேயாகும். இலங்கை அரச ியலில் வர்க்கத்தை சுயாதீனமாக ஒழுங்கமைக்கின்ற புதிய புரட்சிகர இடதுக்கான வரலாற்றுத் தேவையை நிரப்புவதற்காகும். மக்கள் விடுதலை முன்னணி ஒரு கட்சியென்ற அடிப்படையில் பல்வேறு இடையூறுகள் மற்றும் கஷ்டங்கள் மத்தியில் இவ்வளவு தூரம் வந்தமைக்கான இரகசியம் அதுவாகும்.

அன்று 1964ல் பழைய இடதுசாரி இயக்கம் பாட்டாளி வர்க்கத்தை காட்டிக்கொடுத்து வர்க்கத்தை கைவிட்டு முதலாளித்துவ அரசாங்கத்தின் பங்கலியாக ஆனதன் இடைவெளியை நிறப்புவதற்கு மக்கள் விடுதலை முன்னணி உருவாதல், மக்கள் விடுதலை முன்னணி முதலாளித்துவ அரசாங்கத்தின் சிறைக் கைதியாவதை நிராகரித்து மக்களை சுயாதீனமாக ஒழுங்கமைக்கும் பணியை கையில் எடுத்தபோது, மக்கள் விடுதலை முன்னணி முதலாளித்துவ அரசாங்கத்துடன் இணையாமையை காரணமாகக் கொண்ட (2008ல்) மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிய வலதுசாரிய சந்தர்ப்பவாதிகள் சிலர் முதலாளித்துவ அரசாங்கத்தின் கைகூலிகளாக மாறி கட்சியொன்றை அமைப்பானது மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கத்துடன் ஒப்பிட முடியாத ஒன்று. அதேபோன்று மீண்டும் (2011ல்) மக்கள் விடுதலை முனன்ணியினுல் சதிகாரகார கும்பலாக (குழுவாக) செயற்பட்டு அது அம்பலமானதுடன் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து வெளியேறி அதிதீவிர இடதுசாரி வடிவிலான சுலோகங்களை உச்சரித்தனர் ஆனால் உண்மையில் சகல பிற்போக்குவாதிகளும் சிறு முதலாளித்துவ குழுக்களுடன் கைகோர்த்துக் கொண்ட சந்தர்ப்பவாத குழுவினால் கட்சியொன்றை அமைத்தல் 1965ல் ஜே.வி.பி உருவாக்த்துடன் ஒப்பிட முடியாது.

உலக இடதுசாரி அரசியலின் வரலாறு முழவதிலும் இடதுசாரி இயக்கத்திலிருந்து குழுக்களாக விலகியமையை இரண்டு விதமாக புரிந்துக் கொள்ள முடியும். அதில் ஒன்று, தவறான கட்சிகளில் சரியான தொடர்ச்சி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தேர்தல் முடிவுகளின் சவால்



உலகில் பெரிய பல் கட்சி தேர்தல் என கருதப்படுகின்ற, ஆறு வாரங்களாக நடைபெற்ற இந்திய தேர்தலின் முடிவுகள் அண்மையில் வெளியா-னது. அது இந்தியாவின் 16வது பொதுத் தேர்தலாகும். இந்திய பாராளுமன்றத்தில் (லோக்சபாவில்) 543 ஆசனங்களுக்காக பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக இத்தேர்தல் நடாத்தப்பட்டது.

பொதுத் தேர்தலின் முடிவுகளின்படி இந்து தேசிய வாத வலதுசாரி பாரதீய ஜனதா கட்சி 282 ஆசனங்களை வென்றுள்ளது. இந்திய பாராளுமன்றத்தில் ஆட்சி அமைப்பதற்கு தேவைப்படுவது 272 ஆசனங்களாகும். பாரதீய ஜனதா கட்சி மேலதிகமான ஆசனங்களை வென்றுள்ளது. 1984ல் இந்திரா காந்தியின் படுகொலையின் பின்னர் தனி கட்யொன்று பெரும்பான்மை ஆசனங்களை வென்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2009ல் நடைபெற்ற 15வது பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி 116 ஆசனங்களை மட்டுமே வென்றது. 17.21 சதவீத வாக்குகளாகும். இம்முறை அந்தக் கட்சி 31.1 சதவீத வாக்குகளை பெற்று பாராளுமன்ற ஆசங்களில் 51.9 சதவிதத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் குஜாரத், ராஜஸ்த்தான், இமாச்சல் பிரதேசம், தில்லி ஆகிய மாநிலங்களில் சகல ஆசனங்களையும் உத்திர பிரதேசத்தில் 80ல் 73ம் மத்திய பிரதேசத்தில் 29ல் 27லும் அவர்கள் வென்றுள்ளனர்.

ஆட்சியிலிருந்த இந்திய கங்கிரஸ் கட்சி இம்முறை தேர்தலில் படுதோல்வியைத் தழுவியது. 2009 பொதுத் தேர்தலில் 206 ஆசனங்களை வென்றிருந்த காங்கிரஸ் கட்சி இம்முறை 44 ஆசனங்களையே வென்றுள்ளது. 07 மாநிலங்களில் அவர்கள் ஒரு ஆசனத்தை கூட பெறவில்லை.

தமிழ்நாடு மாநிலத்தில் 39 ஆசனங்களில் 37 ஆசனங்களை ஜெயலலிதாவின் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் வென்றுள்ளது. இதற்கு முன்னர் 18 ஆசனங்களை வென்றிருந்த கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம் இம்முறை ஒரு ஆசனத்தையும் பெறவில்லை.

இம்முறைத் தேர்தலில் இந்திய இடதுசாரி கட்சிகள் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. இந்திய இடதுசாரி கட்சிகள் அண்மைய வரலாற்றில் 2004ம் ஆண்டிலேயே சிறந்த முடிவுகளை பெற்றிருந்தது. 2009ல் அது குறைவடைந்ததுடன் இம்முறை அதையும்விட குறைந்துள்ளது. 2009ல் 04 ஆசனங்களை வென்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இம்முறை ஒரு ஆசனத்தையே வென்றுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் 16 ஆசனங்களை வென்றிருந்த இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPI-M) இம்முறை 09 ஆசனங்களையே வென்றுள்ளது. ஒரு ஆசனத்தை தன்னகத்தே கொண்டிருந்த இந்திய முன்னிலை கட்சி இம்முறை அதை இழந்துள்ளது.

எவ்வாறாயினும் இந்திய மார்க்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி (CPI-M) 17986773 வாக்குகளைப் பெற்றுமொத்த வாக்குகளில் 3.2 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. மேலும் இரண்டு ஆசனங்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (CPI) மார்க்ஸ் லெனினிஸ் (CPI-ML) இந்திய கம்யூனிஸ கட்சிகளில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இந்தியாவில் சகல கம்யூனிஸ்ட் கட்சிகளையும் எடுத்துக் கொண்டால் இம்முறை பொதுத் தேர்தலில் 28 மில்லியன் வாக்குகளை பெற்றுள்ளது.

புதிய பிரதமராக நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்டு புதிய அரசாங்கத்தை அமைத்தாலும் பாரதீய ஜனதாக் கட்சி காங்கிரஸ் கொண்டுச் சென்ற வேலைத் திட்டத்தையே முன்னெடுக்க வேண்டும். அராசாங்கம் மாறியபோதிலும் இந்தியாவில் பொருளாதார, அரசியல் மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் மற்றமடையப் போவதில்லை.

அவ்வாறான போதிலும் இந்திய பொதுத்தேர்தல் முடிவுகள் முக்கிய அரசியல் விடயங்களை தோற்றுவித்துள்ளது.

பாரதீய ஜனதா கட்சி இந்து இனவாத கட்சி என்றாலும் அவர்கள் தேர்தல் இயக்கத்தில் முழு இந்தியாவுக்கும் பொருத்தமான காரணிகளையே முன்வைத்தனர். "ஒளிரும் இந்தியா" அல்லது இந்தியாவை சீர்வாக்கும் சுலோகமாகும். அது அவர்களுக்கு சிறந்த முடிவினை தந்திருக்கிறது. "ஒளிரும் இந்தியா" எனும் கனவினை அனைவரும் அரவணைத்துள்ளனர். அதற்கிணங்க பாரதீய ஜனதா கட்சி தலைமைத் தாங்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 336 ஆசனங்கள் கிடைத்துள்ளது.

மற்றைய விடயம் என்னவெனில் இந்தியா முழுவதிலும் வீசிய "மோடி அலை" தமிழ் நாட்டு மாநிலத்திற்கு உரியதல்ல. "ஒளிரும் இந்தியா" எனும் சுலோகம் தமிழ்நாட்டு மாநிலத்திற்கு விசேடமாகவில்லை. அதில் 39 ஆசனங்களில் 37 ஆசனங்களை கைபற்றியிருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகமாகும். பாரதீய ஜனதா கட்சிக்கு ஒரு ஆசனமே கிடைத்தது.

இந்தியாவில் பிரதான இடதுசாரி கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (CPI) இந்திய மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியும் தேசிய மட்டத்தில் அரசியலில் ஈடுபடாத மாநிலங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட கட்சியல்ல. ஆனால் இந்திய தேர்தல் முறைப்படி நடாத்தப்படும் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசனங்களில் மட்டும் போட்டியிடுவதற்கு அவர்களுக்கு வற்புறுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. இந்திய இடதுசாரி கட்சிகளின் பின்னடைவை பற்றி கருத்துத் தெரிவிக்கின்ற ஆய்வாளர்கள் அதுவே அவர்களுக்கு பாதகமான முடிவுகளை தந்துள்ளதாக கூறுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசனங்களில் மட்டும் போட்டியிடுவதால் அவர்களின் தேர்தல் இயக்கம் தேசிய ரீதியிலான தேர்தலாக அமையவில்லை. தேசிய அரசியலில் ஏற்படும் பொதுத் தாக்கம் இதனால் அவர்களுக்கு கிடைக்கவில்லை. மறுபுறத்தில் ஒவ்வொரு மாநிலங்களிலும் இவர்களைவிட மாநிலக் கட்சிகள் பிரச்சினைகளை சிறந்த முறையில் பிரதிநிதித்துவம் செய்தன. அதன் காரணமாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய வாக்குகள் அவர்கள் இழந்தனர். தேர்தல் முடிவுகள் பற்றி இந்திய மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாவது இந்த தேர்தலில் முன்னரைவிட தமக்கு பாரிய அழுத்தங்கள், அடாவடித்தனம், அடக்கு முறைகளுக்கு முகம் கொடுத்ததாக குறிப்பிடுகிறது. அவ்வாறான தாக்குதல்களும் தமக்கு தேர்தலில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிடுகிறது.

எவ்வாறாயினும் இந்த நிலமைகளை நன்கு மீளாய்வுசெய்து மக்கள் ஆதரவை வென்றெடுப்பது இந்திய இடதுசாரிகள் முன்னால் சவாலாக இருக்கிறது.

| கட்சி | 2009 | 2014 | 2014 |
|---|---|---|---|
| | பொதுத் தேர்தல் ஆசனங்கள | பொதுத் தேர்தல் ஆசனங்கள் | பொதுத் தேர்தல் விகிதம் |
| பாரதீய ஜனதா கட்சி | 116 | 282 | 31.மூ |
| இந்திய காங்கிரஸ் கட்சி | 206 | 44 | 19.3மூ |
| அகில இந்திய அண்ணா திரவ-ிட முன்னெறற் கழகம் | 09 | 37 | 3.3மூ |
| இந்திய மார்க்ஸிஸ கம்யூனிஸ ட் கட்சி (ஊீஜ-ஆ) | 16 | 09 | 3.2மூ |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (ஊீஜ) | 04 | 01 | 0.8மூ |
| அகில இந்திய முன்னேற்றக் கட்சி | 01 | - | 0.2மூ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் கடல் எல்லை இந்தியாவுக்கும் சீனாவுக்கும் தாரைவார்ப்பு

**மாகாண சபை உறுப்பினர் தோழர் நிஹால் கலப்பத்தி**



தற்போதைய ஆட்சியாளர்கள் இந்நாட்டின் வடபகுதி கடல் எல்லையை இந்தியாவுக்கும், தென்பகுதி கடல் எல்லையை சீனாவுக்கும் தாரைவார்த்து, இந்நாட்டு மீன்பிடி தொழில் துறையை அதளபாதளத்தில் தள்ளப்பட்டுள்ளது என அகில இலங்கை மீனவ பொதுச் சம்மேளனத்தின் தலைவர் நிஹால் கலப்பத்தி அரசாங்கத்தை குற்றம் சுமத்துகிறார்.

கடந்த 28ம் திகதி காலியில் அகில இலங்கை மீனவ பொது சம்மேளனத்தின் செய்தியாளர் மாநாட்டின் போதே இக்கருத்துக்களை இவர் வெளியிட்டார்.

இந்திய, இலங்கை மீன்பிடி துறை பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மிகவும் கீழ்த்தரமான தீர்வுகளை தான் இலங்கை அரசு கடைபிடித்து வருகின்றது. இரு நாட்டு மீனவர்களும் கடல் எல்லைகளை கடந்து மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர். அதனால் இருநாட்டு பாதுகாப்பு பிரிவினரும் இலங்கை மற்றும் இந்திய மீனவர்களை கைது செய்யும் நிலை உக்கிரமாகி வருகின்றது. இங்கு எமது மீன்பிடி துறை மிகவும் கவலைலகரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்திய மீன்பிடி படகுகள் இந்நாட்டு வடபகுதி கடலில் மீன்பிடிக்கின்றனர், சிலசமயம் ஒரு தடவைக்கு சுமார் 700, 800 படகுகள் வருகின்றது. இவர்கள் வடக்கு, கிழக்கு மீனவர்களின் வலைகளை வெட்டி அழித்து பெரும் அட்டூழியங்களை செய்கின்றார்கள். எனவே எமது மீனவர்களின் நிலை மிகவும் கவலைகரமாக உள்ளது.

2014ல் நாம் சமர்பித்த கோரிக்கைகளை குப்பையில் எறியப்பட்டது. எரிபொருள் மானியத்தை நிறுத்தி ஒருவருடத்திற்கும் மேலாகின்றது. மீனவர்களுக்கு வழங்குவோம் என்று கூறப்பட்ட பாதுகாப்பு கவசங்களை அரசு தமது அரசியல் நண்பர்களுக்கு மட்டும் வழங்கியுள்ளது. நாட்டை சுற்றியுள்ள மீன்பிடி துறைமுகங்களில் பல்வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில் மீன்பிடி அமைச்சரோ ஆழ்ந்த நித்திரையில் உள்ளார். எனவே நாம் நாட்டை சுற்றியுள்ள மீனவர்களுடன் வீதிக்கு இறங்கும் நாள் தொலைவில் இல்லை எனவும் தோழர் நிஹால் கலப்பத்தி வலியுறுத்தினார். இச்சந்தர்பத்தில் அகில இலங்கை மீன்பிடி பொது சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளரும் முன்னால் மாகாண சபை உறுப்பினருமான தோழர் ரத்ன கமகேயும் கலந்து கொண்டார்.

# பாரிஸ் கம்யூன் நினைவு கூறலில் மக்கள் விடுதலை முன்னணியும் பங்கேற்பு!

1789 ல் பிரான்சில் முதலாளித்துவ புரட்சி நடந்தது. அதன்பின் ஏற்பட்ட துரித தொழில் நுட்ப வளர்ச்சியோடு தொழிலாள வர்க்கம் பரவலானதோடு 1871 மார்ச் 18ம் திகதி பெரிஸ் நகரத்தின் அதிகாரத்தை அந்நாட்டு தொழிலாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குல் கொண்டுவந்தனர். ஆனால் முதலாளித்துவத்தின் அடக்கு முறையின் எதிரே 1871 மே 28ம் திகதி அவ்வதிகாரத்தை முற்றாக அவர்கள் இழக்க நேரிட்டது. அச்சந்தர்ப்பத்தில் சுமார் 20000ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிர் நீத்ததுடன் சுமார் 45000 தொழிலாளர்கள் கைதிகளானார்கள்.

உலகில் முதன்முதலாவது தொழிலாள வர்க்கத்தின் ஆட்சியாக கருதும் பாரிஸ் கம்யூனுக்காக போராடிய சிரேஸ்ட போராளிகளின் 143வது நினைவு கூறல் கடந்த மே மாதம் 25ம் திகதி பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரத்தில் Pere Lachaise மயானத்தில் இடதுசாரி இயக்கங்களினால் நடாத்தப்பட்டது. இத்தருணத்தில் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவம் செய்து பிரான்ஸ் கமிட்டியின் தோழர்களும் இதில் கலந்து கொண்டனர்.



# எமது நோக்கு இங்கிலாந்திலும்



மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்கா கடந்த மே மாதம் இங்கிலாந்தில் 08 நகரங்களில் கருத்தரங்குகள் நடாத்தினார். இவற்றில் எமது நோக்கு கொள்கை திட்டம் குறித்தும் தற்போதைய அரசியல் நிலமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதோடு அந்நாட்டில் வாழும் இலங்கையர்கள் பலரும் இச்சந்தர்பத்தில் கலந்துகொண்டனர். அண்மைகாலத்தில் எமது நாட்டிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற அரசியல் தலைவர்களுல் இதேபோன்ற பல அரசில் கலந்துரையாடல்களை யாராலும் நடாத்தப்படவில்லை என்பது குறிப்படத்தக்கது மக்கள் விடுதலை முன்னணியின் பிரித்தானியா கமிட்டி இக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

# தண்ணீரின் உரிமையை கேட்டு வீதிப்போராட்டங்கள்!



விவசாயிகளை அத்துரையிலிருந்து வெளியேற்றுவதே ராஜபக்ஷாவின் திட்டமாக உள்ளது. அதாவது கெசீனோ திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத் துரையை நம்பியிருக்கும் பொருளாதார திட்டத்துக்கு விவசாயத்துறை தேவைப்படாததாலேயே இந்த அரசாங்கம் இவ்வாறு நடந்து கொள்கின்றது. விவசாயத்துறைக்கு தேவையான தண்ணீரை, அடிப்படை வசதிகளை பெற்று கொடுக்காமை, விவசாயிகளின் ஓய்வூதியத்தை துண்டித்தல் போன்று விடயங்கள் இதில் குறிப்பிடத்தக்கவையாகும். அரசாங்கத்தின் இந் நடவடிக்கைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியை சார்ந்த அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தொடர் போராட்டத்தை நடாத்தி வருகின்றது. இதன் ஒரு கட்டமாக அண்மையில் மெதிரிகிரியா நகரத்தில் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் ஏனைய விவசாயிகள் சங்கங்களையும் ஒன்றிணைத்து தமக்கு விவசாயம் செய்வதற்கு தண்ணீர் வளங்காததற்கு எதிராக ஆர்பாட்டத்தை நடாத்தியது.

விவசாய நிலங்களுக்கு அரசு தண்ணீரை வழங்காததால் நாட்டின் பல பாகங்களில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் அன்றாட உணவு கூட இல்லாமல் பல துயரங்களை அனுபவித்து வருகின்றதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் செயலாளரும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினருமான ரீ. பீ. சரத் தோழர் தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
25 JUN 2014
PERIODICALS DIVISION

## நெருக்கடியின் 5ம் பக்கம்



சட்டமும் நிர்வாகமும் நலிவடைந்துள்ளது. இவற்றோடு நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களை பார்க்கும்போது இருண்ட சித்திரமே தென்படுகிறது. இவை அனைத்து பொறுப்பிலிருந்து அரசாங்கம் மீள முடியாது. இவ்வாறான நிலையில் அரசாங்கத்தினதும் முதலாளித்துவதினதும் மற்றைய பிரதிநிதியான ஐ.தே.க தொடர் நெருக்கடியில் அமிழ்ந்துள்ளது. தொவது இவைகள் அனைத்தும் ஆளும் வர்க்கத்தின் மேலும் மேலும் நெருக்கடிக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகும். தற்போதைய நெருக்கடியின் அளவானது முதலாளித்துவத்தை இறுதிக் கட்டத்தை நோக்கி கொண்டு வந்துள்ளது. ராஜபக்ஷ உள்ளிட்ட முதலாளி வர்க்கத்திற்கு இதிலிருந்து மீள முடியாத. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்கும் முயற்ச்சியை பற்றி ஒரு தடைவ லெனின் குறிப்பிட்டவாறு ஒருவர் தமது சப்பாத்து கயிற்றின் மூலம் இழுத்து தூக்குவதற்கான முயற்ச்சியை போன்றதாகும்.

சமூக மாற்றத்தை எதிர்பார்க்கின்ற இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகள் மிக சிறப்பாக இனங்கண்டு கொள்ள வேண்டியது இந்த நிலமைகளையாகும். அது முதலாளித்துவ வர்க்கம் முக்கொடுத்துள்ள நெருக்கடியை பார்த்து ரசிப்பது மட்டுமல்ல அந்நிலமைகளை சமூக மாற்றத்தை நோக்கி சமூகத்தை கொண்டுச் செல்வதற்காகும். அதற்காக அதற்கு பங்களிக்க கூடிய மக்கள் இயக்கமொன்றை கட்டியெழுப்புவதும் அதற்கு தலமை தாங்கவும் தயாராவதும் இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளின் கடப்பாடாகும்.

## வடக்கின் 3ம் பக்கம்



போர் குற்றமிழைத்தவர்களுக்கு சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

80 தசாப்பதங்களில் இந்திரா காந்தியின் படுகொலையின் பின்னர். 415 ஆசனங்களை பெற்று பாரிய மக்கள் ஆணையை பெற்ற இந்திரா காங்கிரஸ், இலங்கையில் பெரிய மூளைசாலியென வர்ணிக்கப்படும் ஜே.ஆரின் தூரநோக்கற்ற வெளிநாட்டு கொள்கையின் காரணமாக இலங்கை மீது வான் பறப்பை மீறி பருப்பு போட்டு இலங்கை இந்திய ஒப்பந்தமெனும் பருப்பினையும் இந்திய அரசாங்கம் இலங்கை மீது திணிக்கப்பட்டது எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அதனால் தோன்றியிருக்கும் சிக்கலான அரசியல் பின்னணியில் இலங்கை மக்களின் எதிர்கால தலைவிதியை எவ்விதமாக தீர்மானிக்கப்படும் என்பது இலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. யுத்தம் முடிந்து 5 வருடத்தின் பின்னர் ராஜபக்ஷாவின் அரசாங்கம் எதேச்சதிகாரமான, தான்தோன்றித்தனமான அரசாங்கமென்பதை நிரூபித்துள்ளது. அதனால் மக்களுக்கு இரண்டு தெரிவுகளே உள்ளது. அதாவது தமது தலைவிதியை தாமே நிர்ணயிப்பதா? அல்லது தான்தோன்றித்தனமான ஆட்சியாளரிடம் ஒப்படைப்பதா எனும் பிரச்சினையாகும்.

## சிறுபிள்ளைகளின் 2ம் பக்கம்

பயன்படுத்துகிறார்கள் அதிலிருந்தும் வரி அறவிட வேண்டும் என்று நினைத்து அதற்கு வரி செலுத்துகிறார்கள். மக்கள் என்ன அதிகளவாக பயன்படுத்துகிறார்கள் என்பதை பார்த்து அவற்றிலிருந்து வரி அறவிட்டுத் தான் திரைசேரியில் சோத்துக் கொள்கிறார்கள். இவை பிச்சக்காரத்தனமான நடவடிக்கைகள், இப்படி செய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு வெட்கமில்லையா? எமது நாட்டில் பெரும்பாலானோர் வாழ்வது விவசாயத்துறையை சார்ந்து அல்லது உற்பத்தி துறையை சார்ந்து அவற்றை பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கத்துக்கு எவ்வித உரிய திட்டமும் கிடையாது. அவர்களை பாதுகாக்க வேண்டுமானால் இந்த செஸ் வரியின் பலன்கள் மக்களிடம் போய் சேர வேண்டும். எனவே நாம் கூறுகிறோம் சிறுபிள்ளைகளின் பெம்சினாலும் வரி அறவிடும் அரசாங்கம் வெட்கப்பட வேண்டும் என்று. இந்த அரசாங்கத்தில் இருந்து கொண்டு இவற்றுக்கு கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவிக்கும் நீங்களும் உண்மையில் வெட்கப்பட வேண்டும்.

## மக்கள் விடுதலை 8ம் பக்கம்

பிரிவினர் விலகி புதிய கட்சியை உருவாக்குதலாகும். மற்றைய வடிவம் சரியான கட்சியிலிருந்து தவறான பிரிவினர் விலகி கட்சி அல்லது குழுக்களை அமைத்துக் கொள்ளல். இவ்வாறான கட்சிகள் நீண்டு நிலைக்காததுடன் இறுதியாக பிற்போக்குவாதத்தின் கைபாவையாக மாறுமென்று உலக வரலாறு பாடம் கற்றுத் தந்துள்ளது. ஒரு கட்சியிலிருந்து ஏதாவது ஒரு கும்பல் விலகியவுடன் அக் கும்பல் செயலாற்றும் முறை அவர்கள் தமது அரசியல் விமாசனத்தை முன்வைக்கின்ற விதம் மற்றும் புதிய அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்பும்போது செயற்படும் விதத்திற்கு ஏற்ப அக்குழுவின் நோக்கத்தையும் நடைமுறைகள் சரியா தவறா என தேர்ந்தெடுக்க முடியும். பல்வேறு குறுகிய நோக்கங்களுக்கு ஏற்ப செயற்பட்டு கட்சிகளிலிருந்து விலகும் சதிகார கும்பல் பெருவாரியாக அரசியலற்ற தன்மையிலேயே அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கும். அவர்கள் தாம் விலகிய அரசியல் இயக்கத்திற்கு அரசியல் விமர்சனத்தை முன்வைப்பதைவிட்டு அதன் மீது அவதூறுகளை அள்ளிவீசுவது அதனாலாகும். அவதூறுகளை எறிவது அதை அம்பலப்படுத்தி எதிரிக்கு அனைத்தையும் காட்டிக் கொடுப்பது பரிபூரணமடையாத விதத்தில் செயற்படுவது இதனாலாகும். மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து அண்மையில் விலகிய இரண்டு கும்பலும் அவ்வாறு அரசியலற்ற தன்னமையிலேயே செயற்படுகின்றனர். அதேபோன்று அவர்கள் யாரென்று வெளிபடுத்தியபோதிலும், 1965ல் மக்கள் விடுதலை முன்னணி யை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செயதவர்கள் அரசியல் பண்புடனே செயற்பட்டனர். மக்கள் விடுதலை முன்னணியின் உருவாக்கம் பற்றிய பாதையை பார்க்கும்போது இதை புரிந்துக் கொள்ள முடியும்.

தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியாக ஏற்பட்ட அகநிலைக் காரணிகளுக்கு ஏற்ப மக்கள் விடுதலை முன்னணி உருவாகும் போதே புரட்சிவாதமாக இருக்க வேண்டியிருந்தது. அதனால் மக்கள் விடுதலை முன்னணி புரட்சிகர இளம் இயக்கமானது. மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்பமே ஏகாதிபத்தியத்திற்கு, முதலாளித்துவத்திற்கும் போன்றே சந்தர்ப்பவாதத்திற்கும் தொடுத்த பாரிய சவாலாக அமைந்தது. அதனால் முதலாளித்துவ வர்க்கத்தைப் போன்றே சிறு முதலாளித்துவ சந்தர்ப்பவாதிகளும் மக்கள் விடுதலை முன்னணியை தமது எதிரிகளாக கருதுவர் என்று மக்கள் விடுதலை முன்னணியை உருவாக்கிய இளம் பிரிவினர் நன்குணர்திருந்தனர். அதன் காரணமாக மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் ஓரளவு இரகசிய நிலமைகளில் தொழிலாளரின் குடிசைகளில், விவசாயிகளின் குடிசைகளில் மிகவும் கஷ்டமான நிலைமைகளின் மத்தியில் பல உரையாடல்களை நடத்தியது.

மக்கள் விடுதலை முன்னணி உருவாக்கத்தின்போது அது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சி என்பதால் அதற்கு தமது கலந்துரையாடல்களை, மாநாடுகளை நடத்துவதற்கு சர்வதேச மாநாட்டு மண்டபங்கள் கிடைக்கவில்லை. அரச இராணுவபடைகளின் பாதுகாப்பினை பெற்று மக்கள் விடுதலை முன்னணி செயற்படவில்லை. ஏனென்றால் அப்படியான பாதுகாப்பின் மத்தியில் முதலாளித்துவ அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன், புரட்சிகர இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதினாலாகும். அவ்வாறு உருவாக்க முடிவது முதலாளித்துவ வர்க்கத்தின் தேவைகளை நிறைவேற்றும் சிறு முதலாளித்துவ அமைப்புகளுக்கு மட்டுமேயாகும். அதேபோன்று மக்கள் விடுதலை முன்னணி உருவாகியதுடன் அரச சார்பற்ற நிறுவனங்களுடன், சந்தேகத்திற்குறிய வெளிநாடுகள் மற்றும் அமைப்புகளுடன் அணிசேரவில்லை. பல்வேறு சந்தர்ப்பவாத குழு கும்லுடன் இணையவில்லை. அவர்களிமிருந்து பணம் பெற்றுக்கொள்ளவில்லை. பல்வேறு சந்தர்ப்பவாத குழுக்களுடன் கூட்டுச் சேரவில்லை. அதற்குப் பதிலாக மிகவும் இக்கட்டான நிலமைகளில் புதிய இயக்கத்தை கட்டியெழுப்புவதற்காக செயற்பட்டது. அதனால் மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்ப பயணம் மிகவும் கடினமானதாக அமைந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்புக் கொள்கை, அமைப்பு முறை, அமைப்பு ஒழுக்கம் போன்ற அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டு வளர்ச்சி பெற்றது அதன் கடினமான பாதையிலாகும்.

"மனிதர்கள் தங்களுடைய வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால் தங்கள் விருப்பத்திற்கேற்ப அதை உருவாக்கிக் கொள்ள முடிவதில்லை. தாங்களே தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்றப்படி இல்லாமல் கடந்த காலத்திலிருந்து கைமாற்றிக் கொடுக்கப்பட்ட, தயாராகவுள்ள சூழநிலைமைகளுக்கு ஏற்பவே வரலாற்றை உருவாக்குகிறார்கள்"

கார்ல் மார்க்ஸ்

(மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் தொகுதி 04 பக்கம்14)

வரலாற்றை உருவாக்குவது பற்றி மார்க்ஸ் கூறிய உண்மை ஒரு கட்சியின் வரலாறு தொடர்பாகவும் அவ்வாறே பொருந்தும். இதிலிருந்து கருதப்படுவது, கட்சியொன்றை உருவாக்கும்போது தனிநபரின் தலைவர்களின் கூறுணர்வுடைய பணியையும் பொறுப்பினையும் மதிக்காமல் இருப்பதல்ல நபர்களின் விருப்பத்திற்கு மட்டும் ஒரு கட்சியை கட்டியெழுப்ப முடியாது. 1965ல் புதிய இடதுசாரி இயக்கத்தை உருவாக்கும் அக்மீமன கலந்துரையாடலில் கலந்துகொண்ட 07 பேர் ஜே.வி.பி உருவாக்கத்திற்கு முதலில் பங்களிப்புச் செய்தபோதிலும் இவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மட்டும் ஜே.வி.பியின் பயணம் தீர்மானிப்படவில்லை. அது நபர்களின் நோக்கத்தைப் போன்றே அதற்கு வெளி யில் செயற்பட்ட புறநிலைக் காரணிகள் மற்றும் வேறு சக்திகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளும் இணைத் தொடர்புடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

UNIVERSITY OF JAFFNA LIBRARY 25 JUN 2014

## அனைத்து நடவடிக்கைகளும்

### ஒன்றிணையும் திசையை நோக்கியதாக அமைய வேணடும்

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசானாயக்க**

எமது நாட்டில் தேசிய ஒற்றுமை அரச அழுத்தங்களினால் உருவாகாது. அது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே எற்படும் கருத்தியல் ரீதியான இணக்கப்பாட்டினால் மட்டுமே உருவாகுமெனவும் நாம் எமது அனைத்து செயற்பாடுகளையும் அத் திசையை நோக்கி முன்னெடுக்க வேண்டும் எனவும் மொழியின், மதங்களின் வித்தியாசங்களின் உரிமையை ஒற்றுமையை ஏற்படுமத்தும் தசையை நோக்கியதாக இருக்க வேண்டுமென, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க சுட்டிக்காட்டுகிறார்.

கடந்த 12ம் திகதி கொழும்பு தபால் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அகில இலங்கை முஸ்லிம் லீக் இளைஞர் முன்னணியின் மாநாட்டில் சிறப்புரையாற்றிய தோழர் அனுர குறிப்பிட்டார்.

தேசிய ஒற்றுமையை, சகோதரத்துவத்தை கட்டியெழுப்பும் பணியை நாங்களே செய்ய வேண்டும். எமது நாட்டின் ஆட்சியாளர்கள் ஒருபோதும் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப மாட்டார்கள். எனவே எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டுமானால் எல்லாவித இனவாதங்களையும் நிராகரிக்க வேண்டும். ஒரு இனவாதம் பலமடையும் போது அதற்கு எதிரான இனவாதமும் பலமடைகிறது. எனவே இனவாதத்தை நிராகரிக்கும் ஓர் முன்னணியை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அது மட்டும் போதுமானது அல்ல. எமது நாட்டில் பிரதானமாக மூன்று இனத்தவர் வசிக்கின்றார்கள். அவர்கள் பிரதானமாக இரண்டு மொழிகளை பேசுகிறார்கள். எனவே அவர்களுக்கு தமது தாய் மொழியில் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் உரிமையை நாம் ஏற்றுகொள்ள வேண்டும். ஏற்றுகொள்பவற்றை உண்மையாக நடைமுறை படுத்த வேண்டும். பிரதேச செயலக அலுவலகத்துக்குத் தமிழ் மொழியில் ஒரு கடிதத்தை அனுப்பினால் கிடைக்கும் பிரதிபலன் என்ன? பதில் கிடைப்பது ஒன்று சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில், அல்லது பெரும்பாலும் பதில் கிடைப்பதில்லை. பொலிஸில் ஏதாவது முறைபாடு செய்தால் பொலிசார் சிங்களத்தில் எழுதுவதை தமிழ் மக்கள் கைச்சாத்திடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே எமது நாட்டின் மொழி பிரச்சினையை தீர்க்கப்பட வேண்டும். எந்த குடிமகனுக்கும் தமது தாய் மொழியில் கல்வி கற்பதற்கும் ஏனையோருடன் தொடர்பு கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும். அனைத்து இனத்தவருக்கும் இது எனது தாய் நாடு என்ற உணர்வு அப்போது தான் ஏற்படும்.

எமது நாட்டில் நான்கு பிரதான மதங்கள் உள்ளது. புத்தர் போதித்ததும் அன்பும் கருணையும் ஆகும், யேசுவும் அயலவருக்கு அன்பு செலுத்துங்கள் என்று, ஒரு மனிதன் பிறப்பிலிருந்து இறக்கும் வரை எப்படி வாழ வேண்டும் என்று ஆராயிரத்து அறுநூற்று அறுபத்தி ஆறு வரிகளில் நபி நாயகம் போதித்திருக்கிறார், “அன்பே சிவம்” அன்பு என்பது இறைவன் என்று இந்து மதத்தில் சிவபெருமான் போதித்திருக்கிறார். இந்த நான்கு மதங்களும் சமுதாயத்தை நல்வழி படுத்துவதற்கே உதவுகிறது. சமுதாயத்தை ஒற்றுமையின் திசைக்கு கொண்டு செல்கிறது. எனவே அனைத்து மதங்களுக்கும் உள்ள உரிமையை ஏற்றுகொள்ள வேண்டும்.

எந்த இனத்துக்கும் அவர்களுக்கான சம்பிரதாயங்கள் இருக்கின்றது. முஸ்லிம் மகளிரின் பர்தா, தமிழ் மகளிரின் மூக்குதோடு, சிங்கள மகளிரின் மேல்நாட்டு சேலை, அதனால் தான் எமது நாடு இவ்வளவு அழகாக இருக்கின்றது. அது தான் சம்பிரதாயங்கள். ஒருமையில் இருந்து பன்முகத்தன்மைக்கு நாம் மதிப்பழிக்க வேண்டாம். தேசிய ஒற்றுமையை அவ்வாறு தான் கட்டியெழுப்ப முடியும். இத்தருணத்தில் பெறுமையுடன் ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். 1989 காலகட்டத்தில் தான் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. ஆனால் முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தாவுக்காக துணிகளை வழங்கவில்லை. எமது கட்சியின் தோழர் விஜித ஹேரத் அமைச்சராக இருந்த போது, நாங்களும் அமைச்சரவையில் இருந்த போது தான் ஒரு பிரேரணையை கொண்டு வந்து முஸ்லிம் மாணவிகளின் பர்தாவுக்கு தேவையான துணியை பாடசாலை சீறுடைக்கு வழங்க வேண்டும் என்று கூறினோம். அந்த பிரேரணையை அமைச்சரவையில் நாம் ஆமோதித்தோம்.

நாம் மிகவும் குறுகிய காலமே உயிர் வாழுகிறோம். சுமார் 70-80 வருடங்கள் வாழ்ந்து மரணிக்கின்றோம். ஆயிரம் வருடங்கள் நாம் உயிர்வாழ்வதில்லை. எனவே தற்போதைய பரம்பறையினர் செயல்பட வேண்டியது எதிர்காலத்தில் ஒரு யுத்தத்தை நடத்தவதற்கு அல்ல. பாதுகாப்பான எதிர்காலத்திற்காகும். இன்று தொழில்நுட்பம், விஞ்ஞானம், கல்வி அறிவு அதிகூடிய மட்ட வளர்ச்சியை பெற்றுள்ளது. அந்த வளர்ச்சியை நாம் அனுபவிக்க வேண்டும். ஆனால் அந்த தொழில் நுட்ப வளர்ச்சியை எதற்காக பயன்படுத்துகிறார்கள்? எமக்கிடையே எதிர்ப்பு மனோபாவத்தை கூட்டுவதற்காக ஆகும். எனவே நாம் அந்த வளர்ச்சியை மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டும். தேசிய ஒற்றுமைக்காக எமது நாட்டில் எல்லா நிறுவனங்களிலும் ஒரு கருத்தியலை போஷிக்க வேண்டும்.

எமது நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஏற்படும் கருத்தியல் ஒருங்கினைவினால் மட்டுமே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப முடியும். எனவே எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் பொறுப்பை வேறு ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று நாம் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். எம்முள் மாற்றங்கள் செய்து கொள்வதற்காக நாங்கள் பாடுபட வேண்டும். அதற்காக போராட வேண்டும். அதற்காக செயல்படுவோம், ஒன்றிணைவோம் என்று நாம் உங்களை அழைக்கின்றோம்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,யஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வலவுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.